# அன்னீத நாடகம்

பதிப்பாசிரியர்

தெ.பொ.மீ.

O-,892 1MP,A
N80.
96591.

சர்வோதய இலக்கியப் பண்ணை
மதுரை உலகத் தமிழ் மாநாட்டுச் சிறப்பு வெளியீடு
எண் : 2

# அன்னீத நாடகம்

*Sarvodaya Ilakkiya Pannai*
*Collected Works of*

Prof. T. P. Meenakshisundran
Volume XII

# Anneeta Natakam (in Tamil)
(Edition of a rare XVIII Century Tamil Manuscript)

**சர்வோதய இலக்கியப் பண்ணை**
பேராசிரியர் தெ. பொ. மீ. நூல்கள் வரிசை
தொகுதி—12

**Sarvodaya Ilakkiya Pannai**
**32/1 West Veli Street, Madurai-625 001**
**1980**

*தில்லைவிடங்கன்*
*மாரிமுத்தாப் பிள்ளை இயற்றிய*

# அன்னீது நாடகம்

பதிப்பாசிரியர்

**தெ. பொ. மீ.**

முகவுரை

*மு. சண்முகம் பிள்ளை*

**சர்வோதய இலக்கியப் பண்ணை**
32/1 மேலவெளி வீதி, மதுரை - 625 001
1980

முதற் பதிப்பு : நவம்பர் 1980

விலை : ரூ 5-00

O → 892-MMP,4
N80

இந்திய அரசு சலுகை விலையில் வழங்கிய
மலிவுத் தாளில் இந்நூல் அச்சிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு பழஞ்சுவடி நூலக அனுமதியுடன்
இந்நூல் வெளியிடப்படுகிறது.

வெளியிட்டோர்:
சர்வோதய இலக்கியப் பண்ணை
32/1 மேல வெளி வீதி, மதுரை-625 001
தொலைபேசி : 31746

அச்சிட்டோர் :
மீரா பிரிண்டர்ஸ்
77, தெற்கு மாரட் வீதி
மதுரை-625 001

# ஒரு குறிப்பு

பேராசிரியர் தெ. பொ. மீனுட்சிசுந்தரனரின் நூல்களை யெல்லாம் பல தொகுதிகளாகத் தொகுத்து வெளியிடவேண்டும் என மூன்ருண்டுகளுக்கு முன்னர்த் திட்டமிட்டோம். இத் திட்டத்தின்படி இதுவரை பதினெரு தொகுதிகள் வெளிவந்துள்ளன. இப்பொழுது பன்னிரண்டாவது தொகுதி வெளியாகிறது.

பேராசிரியர் அவர்களின் மறைவுக்குப் பின்னர் வரும் முதலாவது நூல் இதுவாகும். தமிழினத்தின் மூத்த தலைவனுகத் திகழ்ந்த குருதேவர் தெ. பொ. மீ. அவர்களின் எல்லா நூல்களும் இவ்வரிசையில் விரைவில் வெளியாகும் என்பதில் ஐயமில்லை.

தில்லைவிடங்கன் மாரிமுத்தாப்பிள்ளை இயற்றிய அன்னீத நாடகம் என்னும் நூலின் ஏட்டுப் பிரதியை அன்னரின் சந்ததியினரிடம் பெற்று அதனைச் சென்னையில் உள்ள தமிழ்நாடு பழஞ்சுவடி நூலகத்திற்கு 1956-ஆம் ஆண்டு பேராசிரியர் தெ. பொ. மீனுட்சி சுந்தரனர் அன்பளிப்பாய் வழங்கினர். இச் சுவடி இரு வகைகளில் மிகவும் முக்கியமானது. கான் சாகிபின் வரலாற்றுக்கு இச் சுவடி பெரிதும் ஒளிதருகிறது. பதினெட்டாம் நூற்ருண்டுத் தமிழகச் சமுதாய வரலாற்றுக்கு இச் சுவடி புதிய விளக்கம் தருகின்றது. தெ. பொ. மீ. அவர்கள் இச் சுவடியை நீண்ட காலமாகப் பதிப்பிக்கத் திட்டமிட்டிருந்தார். அது கனவாகவே அமைந்துவிட்டது. சில ஆண்டுகளுக்கு முன்னர் அவர் அகிலஇந்திய வானெலியில் நிகழ்த்திய ஒரு சொற்பொழிவிலும், பின்னர் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் அவர் நிகழ்த்திய லாலாலஜபதிராய் நூற்ருண்டு விழா நினைவுச் சொற்பொழிவிலும் இச்சுவடியின் சிறப்புப் பற்றிக் குறிப்பாகச் சுட்டிக் காட்டினர். ஆனல் இச்சுவடியைப் படியெடுத்த பொழுது, அதில் பல பகுதிகள் விடுபட்டுப்போன அவலநிலை அறியப்பட்டது. தெ பொ. மீ. அவர்கள் விடுபட்டுப்போன அப்பகுதிகளையெல்லாம் தேடிக் கண்டுபிடித்து முழுமையான வடிவத்தில் சீரிய ஆராய்ச்சிக் குறிப்புக்

ளுடன் இந்நூலைப் பதிப்பிக்கத் திட்டமிட்டார். பல காரணங்களால் இப்பணி எதிர்பார்த்தபடி நிறைவேறவில்லை எனவே இன்று கிடைக்கும் மூலப்பகுதி எவ்வித மாறுதலுமின்றி அப்படியே இங்கு இப்பொழுது வெளியிடப்படுகிறது

மதுரை காமராசர் பல்கலைக் கழகத் தமிழியல் புலத்தைச் சேர்ந்த அறிஞர் மு. சண்முகம் பிள்ளை அவர்கள் இப் பதிப்பிற்கு ஓர் ஆராய்ச்சி முகவுரை வழங்கியுள்ளார்கள். பேராசிரியர் தெ. பொ. மீ. அவர்கள் விட்டுச்சென்ற பணியை அவர் முடித்துள்ளார்.

ஏட்டுச் சுவடியிலிருந்து இந்நூலைப் படியெடுக்கப் பெரிதும் உதவியவர்கள் செல்வி விசய இலக்குமி அவர்களும் வித்துவான் பூ. பாலசுப்பிரமணியன் அவர்களும் ஆவர். அவர்களுக்கு மிகுந்தநன்றி. இந்நூலை வெளியிட அனுமதி வழங்கிய தமிழ்நாடு அரசு பழஞ்சுவடி நூலக அதிகாரிகளுக்கும் நூலை வெளியிடும் சர்வோதய இலக்கியப் பண்ணை அறங்காவலர் குழுவிற்கும், ஊழியர்களுக்கும் நன்றிகள் உரியதாகும். பேராசிரியர் அவர்கள் அடிக்கடி குறிப்பிடுவது போல "எல்லாம் அன்பின் விளைவே".

மதுரை
11--12-1980

ச. செயப்பிரகாசம்

# முகவுரை

மு. சண்முகம் பிள்ளை,
ஆய்வாளர்,
தமிழியல் புலம்
மதுரை- காமராசர் பல்கலைக் கழகம்.

புலவர் பெருமக்களின் அதியற்புதமான கற்பனைகளைக் கண்டு வியந்து போற்றுவர் சுவைஞர் பலர். பெரும்பான்மையான கற்பனைகளும் இல்லது புனைதலாக இருக்கக் காண்கிறோம். இது பற்றிப் 'பொய் பிறந்தது புலவர் வாயிலே' என்று பேசுவாரும் உண்டு.

'அள்ளாதது குறையாது, இல்லாதது பிறவாது' என்றபடி புலவர்கள் ஏதோ ஒரு நிகழ்ச்சியையோ குறிப்பையோ கொண்டுதான் தம் கற்பனை மாளிகைகளைக் கட்ட முனைகின்றனர். கதைகளிலும் காவியங்களிலும் எத்தனையோ கற்பனைகள். அன்றித் தம் காலத்து நிகழ்ந்த உண்மையான நிகழ்ச்சிகளின் அடித்தளத்தில் இலக்கியம் படைத்தாரும் பலராவர். இவ்வகையான ஒரு வரலாற்றுப் பின்னணியைக் கொண்டு எழுந்ததே 'அன்னீத நாடகம்.'

நீதி, நீதம் என்பன ஒரு பொருள் தருவன; அறவழி என்பது பொருள். அநீதி, அநீதம் என்பன அறத்திற்கு மாறுபட்ட பாவச் செயலைக் குறிப்பதாகும். 'அன்னீத நாடகம்' ஆக்கிய மாரிமுத்தாப் பிள்ளை தெய்வத் தலமாம் சிதம்பரத்தை அடுத்த தில்லை விடங்கன் ஊரில் வாழ்ந்தவர். இவர்தம் காலத்தில் சிதம்பரஞ் சீமையிலே சுபேதாரராய் வந்து ஆட்சிபுரிந்தவன் சிவசிதம்பரம்

என்பவன். இவன் குடிகளின் மேல் அநியாய வரிகளைப் போட்டு, அவர்களுக்குக் கொடுந்தண்டம் விதித்துக் கசக்கிப்பிழிந்து வரி வாங்கிய கொடுமைகளை உலகிற்கு இந் நாடக வாயிலாகப் புலவர் புலப்படுத்தியுள்ளார். இந்நூலின் கருப்பொருளை ஆசிரியர் தொடக்கத்தில் பாடிய காப்புச் செய்யுள்களிலேயே தெரிவித்துள்ளார்.

'திருவளர் வாவி சூழும்
சிதம்பரஞ் சீமை தன்னில்
ஒருசிவ சிதம்ப ரன்றுன்
உயர்சுபை யேத்து வந்து
வரியின்மேல் வரியைப் போட்டு
வாங்கிய கதையைப் பாடக்
கரிமுகத் தழகர் தில்லைக்
கற்பகம் காப்புத் தானே'

எனவரும் தில்லைக் கற்பகவிநாயகர் வணக்கப் பாடலில் ஆசிரியர் நூல் செய்த நோக்கம் வெளிப்படுதல் காணலாம்.

இந்நூலுக்கு ஆசிரியர் சூட்டிய பெயரையே அடுத்துவரும் பாடலில்,

'சிதம்பரஞ் சீமை தன்னில்
சிவசிதம் பரன்று னென்போன்
அதம்பண்ணித் தெண்டம் வாங்கும்
அன்னீதி நாடகத்தைப் பாட'

என்று குறிப்பிட்டுள்ளார். 'அன்னீதி' என்பதனை 'அன்னீதம்' என்றும் இவர் பல இடத்தும் வழங்குகின்றார். மக்களுடைய வாய் மொழிகளையே பெரிதும் பயன்படுத்தி நாடகம் எழுதும் இவ் வாசிரியர் இந் நாடகப் பெயரையும் 'அன்னீத நாடகம்' என அமைத்துத் தாம் பாடும் இலக்கியம் ஒரு மக்கள் இலக்கியம் என்பதையும் குறிப்பிட்டுள்ளார் எனலாம்.

தமிழில் 17, 18-ஆம் நூற்றுண்டுகளில் ஒரு வகையான இசை நாடகம் தோன்றி வளரலாயிற்று. குறவஞ்சி, பள்ளு, நொண்டி

நாடகம்,குழுவ நாடகம்போன்று மக்களைப் பாடுபொருளாகக் கொண்டு பிறந்தஇலக்கியங்கள்ஒருவகையின. இசைக்கீர்த்தனை, விருத்தப்பாடல், வசனம் ஆகியவை விரவிவர அமைந்த பல நாடக நூல்கள் மற்றொரு வகையின. பழங்காலக் காவிய புராணப் பொருள்களை அடிப்படையாகக் கொண்டு இவை படைக்கப்பட்டன.

நாடகம் முழுவதும் இசைப்பாடல் வடிவாக அமைந்து நடிப் பதற்கும் படிப்பதற்கும் ஏற்றதாய் அமைவதை இசை நாடகம் எனக் குறிப்பிடுவர். சீகாழி அருணாசலக்கவிராயரின் 'இராம நாடகம்' மிகப்பெரிய இசை நாடக இலக்கியம். கம்பனின் பெருங்காவியத் தையே இசைநாடகமாக்கித் தரும் பெருநூல். இப் பெருநூலின் அமைப்பில் சிறுசிறு நாடகங்களாய் வெளிப்பட்டவை பல. நாட்டு வரலாற்றுப் பின்னணியில் அமைந்தவை மிகமிகக் குறைவே. இதனை நிறைவு செய்வது போல வரலாற்றுப் பின்னணி இசை நாடகமாய் உள்ளது இந்த 'அன்னீத நாடகம்.'

இந் நாடகத்தின் தொடக்கத்தில் கட்டியக்காரனை அறிமுகப் படுத்தி அவனே நாடகக் கதையைச் சொல்வதாக அமைத்துள்ளார் ஆசிரியர். கட்டியக்காரனின் தோற்றத்தை விவரிக்கும் பாடல்களை அடுத்து வரும் அகவலில் நூலின் பதிகம் போலக் கதைப்பகுதி முழுவதையும் அவன் வாக்காக ஆசிரியர் அறிமுகப் படுத்துகின் றார்.

கட்டியக்காரனின் தோற்றம் பற்றிய தருவில் அவன் எத்தகைய கோலத்துடன் தோன்றினான் என்பதைச் சித்திரித்துக் காட்டியுள்ளார். கட்டியக்காரன் நெற்றியில் திருநீறு அணிந்துள்ளான், அவனுடைய இரு தோள்களிலும் வல்லவாட்டு அழகாய்த் தொங்கிக் கொண்டிருக் கிறதாம். அவன் தலையில் குல்லாவும் வைத்துள்ளான். கையில் ஒரு பிரம்பையும் எடுத்துக்கொண்டு ஒய்யாரமாக நடந்து மேடையில் தோன்றுவதைக் காண்கிறோம். மக்கள் மத்தியில் மகிழ்ச்சியையும் கிளர்ச்சியையும் தோற்றுவித்து நாடகத்தைக் காணும் ஆர்வத்தை மிகுவிக்கும் வகையில் அவனுடைய தோற்றமும் உரை களும் அமைகின்றன.

நூலுள் அகவல் பாடல்கள் இரண்டு உள. ஒன்று முதலில் பதிகம் போலக் கட்டியக்காரன் வாயிலாய் நிகழ்ச்சிகளைத் தொகுத்துரைக்கும் பகுதி. மற்றொன்று குடிகளைப் படாதபாடுபடுத்திப் படு தெண்டம் வசூலித்த வகைமையினை உரைப்பது. இவை தவிர இசைப் பாடலாகிய தருக்கள் பல இடம் பெற்றுள்ளன. இடையிடையே கதைத்திருப்பங்களையும் போக்குகளையும் தெளிவுற எடுத்துரைக்க விருத்தப்பாக்களையும் வசனப் பகுதிகளையும் அமைத்துள்ளார் ஆசிரியர். 56 விருத்தப்பாடல்கள் இதில் இடம் பெற்றுள்ளன.

இந் நூலில் சுபேதார் சிவசிதம்பரத்தின் கட்டளையால் சேவகர் குடிகளைக் கொடுமைப்படுத்திய செயல்களையெல்லாம் விவரிக்கின்ற வரையில் நூற்பகுதி உள்ளது. இந்நூலின் பிற்பகுதி கிட்டவில்லை. சென்ற கால வரலாற்று நிகழ்ச்சியை அறிவிக்கும் காரணத்தால் இக் குறைப் பிரதியும் அழிந்துபடாமல் தமிழுலகிற்குத் தரவேண்டும் என விரும்பி அச்சிட்ட பெரியவர் பல்கலைச் செல்வர் டாக்டர் தெ. பொ மீனாட்சி சுந்தரனார் அவர்களாவர் அவர்கள் மறையும் முன்பே அவர்களுடைய அரிய ஆய்வு முன்னுரையுடன் இந்நூலை வெளியிட இயலாமற் போனது ஒரு பெருங்குறையே. பெரியார் விட்டகுறை தொட்ட குறைகளை நிறைவேற்றுவது வழித்தோன்றல்களின் கடனாகு மன்றோ? அந்தவகையில் இந்நாடக நூலுக்கான ஒரு முகவுரையை எழுதும் பணி அன்பர்கள்வழி எனக்கு வாய்த்தது. பேராசிரியப் பெருந்தகையவர்களுடன் பலகாலம் நெருங்கிப் பழகியவருள் ஒருவன் என்ற வகையில் இந்த முகவுரை எழுதும் உரிமை எனக்கு வாய்த்ததும் தெய்வப் பொருத்தமேயாம்.

மதுரையில் பெரியார் அவர்களின் மறைவு நேர்வதற்குச் சில நாள்களுக்கு முன்னதாகக்கூட அவர்களுடன் பற்பல செய்திகள் குறித்து உரையாடும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. தமிழில் நிகண்டு, இலக்கணம், இலக்கியம், நாடோடி இலக்கியம், இசை நாடகம் எதுவானாலும் அவையெல்லாம் தமிழுக்கு ஆக்கம் தருவனவே என்பது அவர்களுடைய கொள்கையாகும்.

தமிழ் இலக்கிய இலக்கண நூல்கள், உரைகள், கல்வெட்டுக்கள் வைணவ வியாக்கியானங்கள் முதலியவற்றிற்குத் தனித்தனி அகராதிகள் கண்டுவரும் பெரியார் சென்னை மர்ரே எஸ். ராஜம் அவர்களின்

முயற்சிகளுக்கு ஆக்கமும் ஊக்கமுமளித்து, அவர் பணிகள்ய இடைருது வளரத் துணைநின்றவர் பெரியார் தெ.பொ மீனுட்சி சுந்தரனுர். திரு. ராஜம் அவர்கள் செய்துவரும் அகராதிப் பணிகள் அச்சாகி நாட்டிற்குப் பயன்பட வழிவகை செய்ய வேண்டும் என்பதிலும் பெருவிருப்புமுடையரா யிருந்தரர். அதற்காக அவர்கள் எடுத்த சில முயற்சிகளும் உள. மறைவதற்கு மிக அண்மையில் நிகழ்ந்த சந்திப்பிலும் திரு.எஸ் ராஜம் அவர்களின் முயற்சிகளைத் தமிழுலகிற்கு அறிமுகம் செய்ய வேண்டும் என்று அன்புடன் எடுத்துரைத்தார்கள். இவ்வாருக நல்ல பணிகள் பல நாட்டில் வளரப் பேருக்கம் அளித்து வந்தபெரியவர் பேராசிரியர் தெ பொ மீனுட்சிசுந்தரனுர் அவர்களாவர் தமிழ் இலக்கிய வரலாற்றிலும் மொழி வரலாற்றிலும் பற்பல நூல்களை ஆக்கித் தமிழுலகிற்கு வழங்கிய அவர்கள் இந்த நாடகத் தையும் பதிப்பிக்க முன் வந்தார் என்ருல் அவருடைய விரிந்த பெரு நோக்கு நமக்கு நன்கு புலனுகும்.

அன்னீத நாடக நிகழ்ச்சிகள் சிதம்பரஞ்சீமையில் 18ஆம் நூற்ருண்டில் நடந்த அரசியல் வரலாற்றுப் பின்னணியில் அமைந் தவையாகும். அந்நாளில் சிதம்பரஞ்சீமையும் மன்னுர் சீமையும் (காட்டுமன்னுர் கோயில் பகுதி போலும்) கடப்பை சுபாவுடன் (கடப்பை என்பது கடம்பூர் என்பதனைச் சுட்டும் போலும்) சேர்ந் திருந்தன. தொடக்கத்தில் இங்கு நல்லாட்சி நடைபெற்று வந்தது. ஆட்சியாளர் குடிகளின்மேல் பட்சம் வைத்து, உடல் வாழ் உயிர் போல அவர்களுக்கு உதவிவந்தனர். ‘மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்’ என்னும் ஆன்ரேர் வாக்கிற்கு இலக்கியமாய் ஆட்சியாளர் இலங்கினர்; மேடெலாந் திருத்தி விளைநிலமாக்க உதவினர்; கொள்ளிடக்கரையிலிருந்து வாய்க்கால்களைப் பள்ளமாக்கி நீர்ப்பாய்ச் சலுக்கு வழிவகுத்துத் தந்தனர். விளைந்த நெல்லுக்குத்தக்கபடி வாரங்கள் அளந்தனர். இத்தகைய துரைத்தனம் இனுதுகான் சாயுபுவின் கண்மணியான கானுசாயபு காலத்தில் நடைபெற்றது.

அடுத்துக் கானுசாயபுவின் மகன் மலாலுகான் ஆட்சிக்கு வந்தார். இவர் நாளிலும் இவருடைய தகப்பன் காலத்தைவிடவும் நீதிகள் நன்கு நடைபெற்றன. இவர் சிவனடியார்களுக்குத் திரவியம் வழங்கினுர். இசுலாமியப் பக்கிரிமாருக்குப் பாலமுது அளித்தார். இந்துக்களும் இசுலாமியரும் வேறுபாடின்றி நடத்தப்பட்டனர்.

இவருடைய செங்கோலாட்சி திக்கெலாம் புகழ் படைத்து விளங்கியது. அடுத்துவந்த **மம்முதுகான்** ஆட்சியும் நல்லாட்சியாகவே அமைந்திருந்தது.

இவருக்குப் பின்வந்த ஆட்சியாளர் **மூதாமியாசாயபு**. இவர், 'செம்பியன் போலச் செங்கோல் செலுத்தினர்' என்று கவிஞர் குறிப்பிடுகின்றார். இவருக்கு மந்திரியாயிருந்தவர் பெரியபெருமாள். நீதி வழுவாத நெறிமுறையில் இவருடைய ஆட்சிக்காலமும் அமைந்திருந்தது. சிதம்பரத்தில் உள்ள அனந்தீசர் ஆலயத்திருப்பணிகள் நடைபெற்றன. புதிதாகத் தேர் செய்து திருவிழா நடத்தினர்.

இச்சமயம் **இங்கிலீசுகாரர்கள்** இவர்தம் கோட்டையைப் பிடித்து ஆட்சியைக் கைப்பற்றினர். ஆங்கிலக் கொடியின்கீழ் சில காலம் ஆட்சி நடைபெற்றது. இங்கிலீசுகாரர்களுக்கு எதிரியாய் அந்நாளிலிருந்த பிரஞ்சுக்காரர்கள் அவர்களிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றினர். இவர்கள் மனத்திடமுள்ள சிலரை நியமித்துச் சீமைப் பரிபாலனத்தைக் கவனித்து வந்தனர். இக்காலத்துத் தீமைகள் திங்கள் கலை போல் நாளும் வளர்ந்து வரலாயின. இதற்கிடையில் ஐந்தாறு பேர்கள் பரிபாலனத்துக்கு வந்து போயினர். அடுத்து மறையவர் குலத்துச் **சாமராயனிடம்** சிதம்பரஞ்சீமையும் மன்னார்சீமையும் தரப்பட்டன. சிறிது நாள் நீதி செலுத்திய பின்பு இம் மறையவன் குடிகளை, வருத்தி வரி வசூலிக்கத் தொடங்கினான். குடிகள் அல்லற்பட்டுக் குடிபெயர்ந்து செல்லத் தொடங்கினர்.

இந் நாளில் **மம்முதலிகான் சாயபு** ஆனை, குதிரை, ஒட்டகம் காலாட் படைகளுடன் வந்து சிதம்பரங் கோட்டையைப் பிடித்து ஆட்சியாளன் சாமராயனையும் சிறைப்பிடித்தார். எங்கும் வெற்றித் தோரணம் தூக்கினர். இவர் சிதம்பரஞ்சீமை ஆட்சிப் பொறுப்பைச் சிவசிதம்பரனுக்கு அளித்து ஏகினர். மம்முதலிகான்சாயபு திருச்சிராப்பள்ளியிலிருந்து அப்பொழுது ஆண்ட பேரரசர் ஆவார்.

சிவசிதம்பரம் குடிகளை அவமதித்து ஆட்சி புரியலானான். அப்பொழுது சுபேதாராக **தூரங்கானு சாயபு**வந்தார். ஆகவே சிவசிதம்பரத்

தின் கொடுங்கோலாட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. சூரங் கானு சாயபுவுக்கு மந்திரியாய் அமைந்தவர் தந்திரி கனகசபை மகராசன். இவருடைய ஆட்சியில் சீமைத் துரைத்தனம் திருந்தியது. அனியாயத்தெண்டம் அகற்றப்பட்டது. வாரப்படி வரி வசூலித் தனர் :

'முன்பின் நடந்த முறைமை தப்பாமல்
அன்புடன் நடத்தி ஆதரித் தெவர்க்கும்
நல்லவன் எனவே நாற்றிசை யெங்கும்
சொல்லவே நீதி துரைத்தனம் செலுத்தி
வந்திடு நாளில்

என்று நாடகக் கவிஞர் மாரிமுத்தாப்பிள்ளை பாராட்டிப் பேசுகின்றார் (பக்.32). இந்த நிலையில்வஞ்சனையே உருவான சிவசிதம்பரன் நவாபின் ஆணைபெற்று மறுபடியும் சிதம்பரஞ்சீமைக்குச் சுபேதாராக வந்தனன். இவனுடைய ஆட்சி நீதிநெறி தவறிய ஆட்சியாய் அமைந்தது. குடிகளுக்கு இவன் அளித்த கொடுமைகள் கொஞ்ச நஞ்சமல்ல. இவனுடைய கொடுங்கோலாட்சியை உலகிற்குப் பறைசாற்ற ஆசிரியர் மாரிமுத்தாப்பிள்ளை இந் நாடகத்தைக் கருவி யாகக் கொண்டுள்ளார்.

இந் நிகழ்ச்சிக்குச் சற்று வேறுபாட்டுடனும் சில நிகழ்ச்சிகள் நாடக விருத்தப்பாடல்கள் வழித் தெரிய வருகின்றன. சிதம்பரஞ் சீமையில் பண்புடன் தெய்வராயன் என்பவன் நாட்டாண்மை செய்து வந்தனன்.

'குடிகளுக்கு வருத்தம தில்லாமலச் சீமைக்
குத்தகைக் காரனுக்கும் நிதிகுறைந் திடாமல்
அடிபிடி யில்லாமல் வரிவம் பில்லாமல்
அனியாய மென்றிடுஞ் சொல்லது மில்லாமலப்
படிபுகம் வாரமும் தீர்வைப் பணமுமுன்பின்
படிநடந் தப்படி திட்டப்படி நடத்தி
வடிவினில் மன்மதரூபன் தெய்வ ராயன்
மகிபதி நாட்டாண்மை செய்து வாழுநாளில்

என்று கவிஞர் இவனுடைய நாட்டாண்மையைப் புகழ்ந்து பேசுகிறார் (பக். 33).

தெய்வராயன் நீதி தவறாது நாட்டாண்மை செய்து வருகின்ற நாளில் மம்முதலிகரான்சாயபுவைச் சிவசிதம்பரம் பேட்டிகண்டு சிதம்பரஞ் சீமையைக் குத்தகையாய்ப் பெற்று ஆட்சிபுரிய வருகிறான். இவன் ஊர்க்குடிகள் மேல் அநியாய வரிபோட்டு அவர்களை வருத்தி வரி தண்டி வரலானான். இச்சமயம் கானுசாயபு சீமைக்குவர கனகசபை மகாராசன் சாயபுவுக்கு விருந்து வைத்துச் சீமை யாட்சியைத் திட்டபடி நடத்தப் பொறுப்பேற்றார். சிவசிதம்பரன் செய்த சீர்கேட்டை நீக்கி நல்முறையாட்சியை இவர் நாட்ட முற்பட்ட போது கான்சாயபு பத்தாயிரம் பொன் சீமையில் வரி போடக் கருதினார். இதை அறிந்த கனகசபைராசன் இது மிக அநியாயம் என்று அவருடன் சேர மறுத்தனர். இச்செய்தி கேட்ட சிவசிதம்பரன் சாயபுவிடம் வந்து தனக்குச் சீமை ஆட்சி தந்தால் நாலு லட்சத்து எண்பதினாயிரம் பொன் காண்பிப்பேன் என்று கேட்டனன்.

'அல்லாவின் பாதமறவாக் கானு சாயபும்
அப்படியே குத்தகையாய்ச் சீமை தன்னைப்
பொல்லாத சிவ சிதம்பரனுக்கே ஈந்தான்'

என்கிறார் கவி (பக். 34). இவ்வாறு ஆட்சிக்கு வந்த பொல்லாத சிவசிதம்பரன் நல்லாட்சி புரியவில்லை. தயவு தாட்சணியமின்றிக் குடிகளை வருத்தி வரிவாங்கப் பல அதிகாரிகளையும் சேவகர்களையும் நியமித்து இவன் செய்த கொடுங்கோலாட்சி கண்டு குமுறிய கவிஞர் உள்ளம் அதனை நாடகமாக்கி உலகிற்கு அறிவிக்க முன்வந்தது. இந் நாடகத்தின் பெரும் பகுதியும் சிவசிதம்பரன் செய்த கொடுஞ் செயல்களையும் அவற்றால் குடிகள் பட்ட துயரங்களையும் உள்ளமுருக்கும் வகையில் நாடக ஆசியர் எடுத்துரைக்கின்றார்.

'செம்மை யெல்லாம் பாழாகிக்
கொடுமையே அறமாகத் தீர்ந்த போதில்'

என்று பாரதியார் ஜார்கால ருஷ்ய நாட்டை வருணிப்பது போன்ற கொடுங்கோலாட்சி சிவசிதம்பரன் ஆட்சி என்பதைக் கவிஞர் காட்சிச்

சித்திரமாக நாடகத்தில் எடுத்துக்காட்டும் பகுதிகள் கல் நெஞ்சையும் உருக்கத்தக்கனவாகும்.

ஆட்சிமுறையில் அந்நாளில் அமைக்கப்பெற்ற அலுவலர் பற்றிய விவரங்களும் நாடகப்பகுதியால் அறியலாகும். கொடுங்கோலன் சுபையதார் சிவசிதம்பரன் தன்னை ஒத்த கொடியவர்களையே நிர்வாகத்திற்குத் தேர்ந்து எடுக்கிறான். இவன் நியமித்த சம்பிரதி இவனைப் போன்ற வஞ்சகனாயிருந்தான். சம்பிரதிக்குத் துணையாக நியமிக்கப்பட்ட அவாலுதார் என்போர்களும் அப்படியே. ஊர்தோறும் மணியக்காரர் நியமிக்கப்பட்டனர். மணியக்காரருக்கு உதவியாகச் சேவுகர்களும் அமர்த்தப்பட்டனர். சேவுகரை அனுப்பும்போது இரண்டிரண்டு பேராகச் சோறு கட்டி அனுப்பி வைக்கிறான். நாயக்கர் என்ற சிப்பாய்மார்களும் நியமிக்கப்பட்டிருந்தனர். ஊர்க்கணக்கர் அந்தந்த ஊர்க் கண்டுமுதல் கணக்குகளை எழுதும் பணி செய்தனர். நாட்டுத் தானாபதியாக வெங்கடாசலய்யன் என்பவன் குறிக்கப்பட்டுள்ளான். சிப்பாய்மார்களை அனுப்பிக் குடிகளை நெருக்கி அவர்களுக்குத் தண்டனைகள் பல அளித்து வரி வாங்குகின்ற நிலைமையை நாடகத்தில் காண்கிறோம்.

ஆட்சியாளர் குடிகளுக்கு இழைத்த கொடுந்தண்டங்களை ஆசிரியர் நாடகத்தில் கூறுவதனைக் கேட்டாலே நமது குலையும் நடுங்கும். அவ்வளவு பெருந் தீங்குகள். சுபையதார் சிவசிதம்பரன் பணம் தண்டப்போகிற சேவுகருக்குச் சொல்லுகிற வார்த்தையில் கொடுந்தண்டங்கள் பல காணப்படுகின்றன :

'இதத்தாலே பணமுளது வாங்கினாலும் சரிதான்
எட்டி மார்பில்

உதைத்தாலும் சரிகுடியை வதைத்தாலும் சரி அடியால்
உயிர் தொண்டைக்குள்

பதைத்தாலும் சரிகடினம் பண்ணிஞலும் சரிதான்
பணந்தான் எந்த
விதத்தாலுந் தினந்தினமுங் கெடுப்படிக்கிங் கனுப்பிவைக்க
வேணும் தானே.

'அடியுங்கோள் சாண்கயத்தில் கிட்டி போட்
டழுந்தத் தொக்கால்
பிடியுங்கோள் நடுமுதுகில் பெரியகருங் கல்லேவைத் து
இடுப்புஞ் சந்தும்
ஒடியுங்கோள் குறடாக்கொண் டுரியுங்கோள் குடுபணமென்
றுறுக்கி மூக்கைக்
கடியுங்கோள் தினக்கெடுவில் அரைக்காசும் குறையாமல்
கட்டுங் கோளே.'

(பக். 46)

ஆட்சியாளரே கொடுமைக்குத் தூதுவிட்டபின் சிப்பாய்களின் கொட்டத்திற்குக் கேட்பானேன்? சுபேதார் சொன்னதற்கு மேலாகவும் பற்பல கொடுமைகளே இழைத்து வரிதண்டலாயினர்.

சீமை முழுவதும் ஊர்கள்தோறும் மணியக்காரரும் சிப்பாய்களும் வரிதண்டுதலுக்காகக் குடிமக்களுக்குச் செய்த கொடுமைகள் கொஞ்ச நஞ்சமல்ல. நாடக ஆசிரியரின் ஊர்மணியக்காரன் சாமிநாதன் செய்த கொடுமையையும் ஆசிரியர் ஒரு பாடலில் உரைக்கக் காணலாம்.

'ஊர்மணியக் காரரெல்லாஞ் செய்யுந் தீமை
யொருமடங்கு தில்லே விடங்கனுக்கு வாய்த்த
பார்பத்தியக் காரனெனுஞ் சாமிநாதப் பாவி
படுத்திய கொடுமை பகரப் போமோ
சோரமொடு கட்டிவரச் சொன்ஞல் வெட்டிக்
கொண்டுவரத் துணிந்த நெஞ்சன் குலேக்கஞ்சாத

சூரன்வைத்த மணியமெல்லாம் ஒருபாக்காகும்
சூதுவித்தைக் கிவனுமொரு பாக்குத் தானே.
(பக் . 56)

'கரங்களிலே கிட்டிகட்டி அடிக்கும் போதிற்
கண்ணீர் பாய்ந்திடத் தலைமேல் கையை வைத்துப்
பெருங்குரலிட் டூர்க்குடிகள் அழவே கண்டப்
பிரேதமா கிலுமசைந்து பேசும் பட்ட
மரங்களும்பால் வடிந்திளகி யுருகும் பால
மலையும்நெகிழ்ந் துளமுருகு மனதிற் சற்றும்
இரங்கறியாக் கரிமூஞ்சிச் சாமிநாத னென்பான்
ஏமாந்திதைப் பராக் கிருப்பன் ருனே' (பக். 57)

தில்லைவிடங்கன் ஊர்மணியக்காரன் செயல்போலத்தான் சீமை முழுவதும் ஊர்கள்தோறும் இத்தகு கொடுங் காட்சிகள்.

இவ்வாறே வார்ச்சிப்பாய்கள் செய்த கொடுமைகளையும் ஆசிரியர்கூறும் போது நமது உள்ளம் பதைக்கும்.

'ஊர்க்குடி யெல்லாம் ஒருமித்துக் கூட்டி
வார்காரர் செய்யும் வருத்தம துரைப்பேன்
கிட்டி கட்டியும் கெடுப்படிப் பணத்தைக்
கட்டுமென் றதட்டிக் கன்னத்தி லடித்தும்
...... ...... ...... ......
இப்படி யாக இடுக்கண் ணியற்ற'
(பக். 59-60)

என்று 45 அடிகளில் இக் கொடுமைகளை ஆசிரியர் அடுக்கிக்கூறும் பகுதியில் காணத்தகும்.

கொடுமையின் எல்லைக்கே குடிகளைத் தள்ளியபோது அவர்கள் என்ன செய்யக்கூடும்? தெய்வத்தை எண்ணிப் புலம்புகிறார்கள்.

'என்செய்வோம் சிவனே யெங்களுக் கினிநீ
தஞ்சமென் றெண்ணித் தான்புலம் பினரே.
(பக்.60)

குடிமக்களின் புலம்பலையும்,

'குத்தகை நஷ்டி குடென்று மிடுக்கிறான் தெய்வமே—இது
கொஞ்சமென்றாலுங் குடுத்துத் தொலைப்போமே தெய்வமே!

என்று தொடங்கும் ஒரு நீண்ட தருப்பாடலாக (பக்.61-62) கவிஞர் வெளிப்படுத்தும் திறமும் காணத்தக்கது.

'என்னசெய்வேன் சபை நாதா
யெங்களுக் குயிரே நீதான்'

என்று குடிகள் தெய்வத்திடம் முறையிட்டுப் புலம்புகின்ற காட்சியுடன் இந்நாடகம் நின்றுவிடுகிறது. இதன் தொடர்ச்சியாகவுள்ள பிற் பகுதியும் கிட்டினால் நாடகத்தின் முழுப்போக்கும் நமக்கு விளக்க மாகும். வேறு நல்ல பிரதிகள் இந்நாடகத்திற்குக் கிடைக்கும் போது இக் குறை நிறைவு பெறும். 'அன்னீத நாடகத்தின்' பிரதி எவரிடமாவது இருக்குமானால் எங்களுக்கு அனுப்பித்தர வேண்டு கிறோம். அடுத்து வரும் இரண்டாம் பதிப்புச் செம்மையாய் அமைய அது எங்களுக்குத் துணையாயிருக்கும்.

இனி, நாடக ஆசிரியர் தில்லைவிடங்கன் மாரிமுத்தாப் பிள்ளை வரலாற்று நிகழ்ச்சிகளை நோக்குவோம். இவர் தெய்வத் தலமாம் சிதம்பரத்திற்கு அடுத்த தில்லைவிடங்கன் ஊரில் பிறந்தவர்; வேளாண்மரபைச் சார்ந்தவர். இவர் வாழ்ந்த காலம் 18- ஆம்

நூற்றுண்டு. இவர்தம் வாழ்நாளில் நிகழ்ந்த அரசியல் கொடுமைகளை இந்த அன்னீத நாடக வாயிலாய் வெளிப்படுத்தியுள்ளார். இந் நாடகம் தவிர ஆதிமூலீசர் நொண்டி நாடகம் ஒன்றும் இவர் இயற்றியுள்ளார். ஆதிமுலீசர் மேல் இவர் இயற்றிய மற்றொரு நூல் ஆதிமுலீசர் குறவஞ்சி. இவர் குறவஞ்சி, நொண்டி நாடகம், இசை நாடகம் என்னும் மக்கள் இலக்கியம் பாடுவதில் முன்னின்றவர் என்பது தெரியவரும்.

தில்லைக்கூத்தப் பெருமானிடம் இக் கவிஞர் பெரும் பத்தி பூண்டவர். புலியூர் வெண்பா, சிதம்பரேசர் விறலிவிடுதூது என்னும் இலக்கிய வகைகளைத் தில்லைக் கூத்தப் பெருமானுக்குப் படைத்-துள்ளார். புலியூர்ச்சிங்கார வேலர் பதிகம், விடங்கேசர் பதிகம் என்னும் பதிகப் பாமாலைகளும் இவருடைய பத்தித் திறத்தை வெளிப்படுத்துவனவாம். சித்திரக்கவிகள், பலவிதவண்ணங்கள், தனிப்பாடல்கள் ஆகியவையும் இவர் பாடியுள்ளார்.

தில்லைப் பெருமான் மீது இவர் பாடிய 56 இசைக் கீர்த்தனங்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை. இவருடைய இசைப் பாடல்கள் மிகமிக உருக்கமானவை. சிதம்பரத்தலப் பெருமையை விளக்கும் கீர்த்தனைப் பாடல்கள் முதலில் இடம் பெற்றுள்ளன. தில்லைத் தல புராண வரலாறுகள் பலவும் அவற்றில் பொதிந்துள.

'எந்தத் தலத்தையு மிந்தத் தலத்துக்
கிணை சொல்லக் கூடாதே ஐயன்'

என்னும் கீர்தனத்தில்,

'ஆதியில் வெண்குட்டம் தீர்ந்து கவுடதேசத்
தரசன் பொன்னிற மானுன்'

என்பது தொடக்கமான பல வரலாறுகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

சிதம்பரம் திருக்கோயிலே எந்தவகையில் தொழுது போற்றி வர வேண்டும் என்பதனை ஒரு கீர்த்தனத்தில் தெரிவித்துள்ளார். இக் கீர்த்தனை தில்லையைத் தொழுவதற்குச் செல்லும் அன்பர்கள் அறிய வேண்டிய ஒன்ருகலின் முழுமையாக இங்குக் காண்போம்.

பல்லவி

தெரிசித்த பேரைப் பரிசுத்தராக்கச்
சிதம்பரமன்றி யுண்டோ?

அநுபல்லவி

விரிவுற்ற பூலோக கயிலையென் றுளமொரு
மித்து நடந்தெதிர் கொண்டு
மேருவொத்தனைய விரண்டோ டிரண்டு
கோபுரத்தைக் கண்ணுரவே கண்டு (தெரிசித்த)

சரணங்கள்

1. மேலைத்திசைக் கோபுரத்தினிற் கற்பக
வேழ முகன்றனை வாழ்த்தி
நாலாநீலத் திருமயி லேறுங் குமரன்முன்
நின்று தொழுதடி போற்றி
அனுகூலச் சிவகங்கை மூழ்கியந்நீரை
யுட்கொண்டு மனக்குறை யாற்றி
இந்த ஞாலத்தை ஈன்றசிவ காமசுந்தரி
பாலுற் றிருவினை மாற்றி வெகு
சீலத் துடன்மலர் சாத்தி
அர்த்த சாமத்திலே தொழுதேத்தி (தெரிசித்த)

2. நம்பித் திருமூல ஸ்தானத்திலே துதி
நாத்தழும் பேறப் பயின்று
உமை யம்பிகை தாளைப் பணிந்து
மலாதியோ டைந்து புலாதியை வென்று

நிதமும்பர் வணங்கும்பே ரம்பலத்தானைக் கண்
டுண்மையாய்ச் சேவித்தகன்று கள்ள
வெம்பிறவிப்பிணி வேரைப் பொடிசெய்யும்
செம்பொற் சபை நாடிச்சென்று
கொடிக் கம்பத் தருகினில் நின்று
கையால் கும்பிட்டரகரா வென்று (தெரிசித்த)

ஞானசபைதனைச் சேவித்தங் குள்ள
ரகசிய வுண்மையை நாடி
யொளி யானத்தை யற்புத ஞானக்கண்ணு
லறிந் தானந்த வாரியில்லாடித்
தவமோனத்துட னங்கிருந்து
செபங்கள் முழுதுஞ் செப்பித் தன்பு நீடி
நாளும் வானத்தவர்க்குங் கிடையாத
முத்தி நிதானத்திற் சேவடி தேடி
மெய்த் தியானத்திலே துதிபாடி
யக்கி யானத்தை வேரறச்சாடித் (தெரிசித்த)

மனத்தை விளித்து உபதேசம் செய்யும் வகையில் அமைந்தவை,

'சிவ சிதம்பரமென்று நினைப்பாயே உனக்
கபசெயம் வாராதென்று மனப்பேயே!'

என்றும்,

,இன்னமு மொருஸ்தல மிருக்குமென் றெருக்காலே
ஏன் மலைக்கிருய் மனதே' (பக். 64)

என்றும் தொடங்கும் கீர்த்தனங்களாகும்.

'காலைத் தூக்கிநின் ருடுந்தெய்வமே என்னைக்
கைதூக்கியாள் தெய்வமே,' (பக்.65)

என்னும் கீர்த்தனம் இசையுலகில் பெரிதும் போற்றிப் பாடப்படுவ தொன்ருகும்.

பழிப்பது போலப் புகழும் நிந்தாஸ் துதிக் கீர்த்தனைகளும் சில உள.

'என்னத் துணிவாய் நான் பயப்படாமல் வந்துன்
னிணையடி பணிவேன் ஐயா?'

(பக். 67)

'வீடுமம் பலமாகி நீருமந்தரமானீர்
வேளை பொல்லாப் பாகியோ?'

(பக்.68

'என்னபிழைப் புன்றன் பிழைப்பையா
லெண்ணிப் பார்த்தாலார்க்கும் பழிப்பையா!'

(பக் . 68)

'உம்மைப்போ லாட்டை யெடுத் தம்பலத்தினிற்பா
ரொருவரைக் காணேனையா!'

(பக்.69)

'இதைவிடக் குதித்துக்கூத் தாடினலு
மூவாயிரத்தி லோர்பங் குமக்கே'

(பக் . 71)

எனவரும் கீர்த்தனங்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கனவாம்.

'என்ன காரியத்துக் கிந்தப் பேயாண்டிமேல்
இச்சை கொண்டாய் மகளே!

என்ற பல்லவியுடன் தொடங்கும் இசைக்கீர்த்தனை யில் அகப் பொருள்நயமும் நிந்தாஸ்துதியுமாய் அமைந்துள்ளது அது வருமாறு:

### அநுபல்லவி

தன்னே ரொருவரில்லாப்
பொன்னம்ப லவன்கண்ணில்
தழலைக்காட்டி யெவர்க்குங்
கழலைக்காட்டு வானேன் (என்ன காரியத்துக்)

### சரணங்கள்

1. காடுஞ் சஞ்சாரம் வீடொன் றில்லாமல் - வேறே
காணே ஞஸ்தியொரு மாடே யல்லாமல்,
ஓடியிர ந்தான் பசிநில்லாமல்-பின்னும்
உண்டா னெச்சிலை வேண்டென்று சற்றும் சொல்லாமல்
ஓர்ந்துபார்த்தால் உருவருந்தங் கெடுவானே-பேர்ந்த
பிட்டை விரும்பிப் பிரம்படி படுவானே;
சார்ந்தவரை அம்பலந் தனிலேற்றி விடுவானே
தீர்ந்த பட்ச நெற்றியில் திருநீற்றை யிடுவானே?
(என்ன காரியத்துக்)

2. சமர்த்தாய்த்தொட் டான்மைதேட அறியாயோ-இந்தத்
தப்பிலிமே லாசையை எறியாயோ,
இமப்புரட்ட னென்பதுங் குறியாயே-மழு
எடுக்கும் வன்னெஞ்ச னென்ப தெண்ணித்தான் பிரியாயோ,
ஏலாது சொன்னேன் நிசமென்றெண்ணுவா யென்சொல்லை
மாலைகொள்ளாதே கொண்டால் வருமே யதிக்கல்லை
போலே யல்லாமலுள்ளே புட்டுக்காட்டினுல் நல்லை
தோலே யல்லாலுடுக்கத் துணையொன் றவனுக்கில்லை
(என்ன காரியத்துக்)

3. குதிரை மாருடின யெத்தனடி-மெத்தக்
கொஞ்ச மதியுடைய பித்தனடி
முதுமை யிளமையில்லாச் சுத்தனடி-சடை
முடிக்குளொரு பெண்டிரை யடக்குஞ் சமர்த்தனடி

முன்னம் நகைத்துச் செய்தான் முப்புரத்தரசை மோசம்
என்ன சொல் லியுமுனக் கேனவனுடன் நேசம்
அன்னங் கண்டறிவதற் கருதினம் பிரயாசம்
பொன்னம்பலனையுட்ட புகுந்து பார்த்தா லாகாசம்
(என்ன காரியத்துக்)

மேலும், (பக்.74)

'பாருங்கள் வந்து — பாருங்களாட்டுது —
பாம்பு பிடாரனையே!

(பக் . 73)

என்னும் கீர்த்தனை வேடிக்கை விநோதமாயுள்ளது.

இயற்றமிழ் நூல்செய்தவர், இசைப்புலவர், நாடகாசிரியர் என்று இவ்வாறு முத்தமிழிலும் வல்ல வித்தகராகத் தில்லைவிடங்கன் மாரிமுத்தாப் பிள்ளை விளங்கினர் என்பதனை அவர்தம் நூல்கள் வழி நாம் நன்குணரலாம்.

தில்லை விடங்கன்
மாரிமுத்தாப்பிள்ளை பாடிய

# அன்னீத நாடகம்

(மூலம்)

# அன்னீத நாடகம்

திருச்சிற்றம்பலம்.

திருவளர் வாவி சூழுஞ் சிதம்பரஞ் சீமை தன்னில்
ஒருசிவ சிதம்ப ரன்ருன் உயர்சுபை யேத்து வந்து
வரியின்மேல் வரியைப் போட்டு வாங்கிய கதையைப் பாட
கரிமுகத் தழகர் தில்லைக் கற்பகங் காப்புத் தானே.

சிதம்பரஞ் சீமை தன்னில் சிவசிதம் பரன்ரு னென்போன்
அதம்பண்ணித் தெண்டம் வாங்கும் அன்னீதி நாடகத்தைப் பாட
மதம்பொழி களிற்றின் பின்பு வந்துகந் தாடுங் கந்தன்
பதந்தொழு தரன்வர் மத்தாள் பதத்தைநெஞ் சழுத்து வாமே.

## நாட்டியத் தரு

குடித்தனஞ் செய்வோரிடுக்கண் கொள்ளசிவ சிதம்பரன்ளுண்
அடித்துவரிப் பணம்வாங்கி....................யும்
வடித்ததிரி சூலமழு மான்கரத்தி லேயெடுத்து
நடித்தருளுங் கனகசபை நாதர்பதம் பணிவாம்.

செய செய......
......... வரிப்பணம் வாங்குந் துஷ்டன்
சிவசிதம் பரஞ்செய் சூழ்ச்சி—
— தனைப்பாடி — ஆ. ஆ.
கொட்டமிடு மயுடன் ...........கோகன
நாயகியைப் பணிவாம். செய செய

நாட்டியத் தரு முற்றும்.

## மங்களத் தரு

மங்களம் நித்திய மன்னருக்கு மங்களம்
கங்கையணி கனக சபாபதிக்கு மங்களம்
துங்கமறை வேணியர்க்கு மங்களம்
துஷ்ட நிக்கிர கருக்கு மங்களம்
சொல்லிரண் டுரையாதார்க்கு சிஷ்......மங்களம்
நெறிதவ ருதவர்க்கு நீதிசெங் கோலினர்க்கு
அறிவரகறத் துரைக்கு மங்களம்
செஞ்சொலிசை வாணருக்குஞ் செம்மைதவ ருதவர்க்கு
வஞ்சனையில்லா துரைக்கு மங்களம்
மங்களம் நீதிமன்னருக்கு மங்களம்.

மங்களதரு முற்றும்.

## கட்டியக்காரன் வருவது

### விருத்தம்

மதியணி சபைநடேசர் வளர்சிதம் பரஞ்சீ மைக்குள்
அதிபதி யெனவே வந்த அமர்சிவ சிதம்ப ரன்ருன்
வதைசெய்து குடிகள் கையில் வரிப்பணம் அடித்து வாங்குங்
கதைதனைச் (சொல்லக்) கட்டியக் காரனும் தோன்றி ஞனே.

### தரு

வய்யகத்துள்ளோர் மகிழ்ந்துய்ய நீறணிந்து வல்ல
வாட்டுமிரு தோள்தன்னிற் போட்டுமழகாகக் கையில்
ஒருபிரம்பு மெடுத்து ஒய்யாரமாய் நடந்து
கட்டியக் காரனுந் தோன்றி ஞனே.

உளமகிழ்ந் தவரவர் நெஞ்சவர் நெஞ்செனவறிந்துரைபேசி
உல்லாச சகலாத்துக் குல்லாவு மணிந்து
களரிதனி லிக்கதையை வளமையுடனே சொல்லக்
கட்டியக் காரனுந் தோன்றி ஞனே.

கட்டியக்காரன் தரு முற்றும்.

### அகவல்

சீர்வளர் பொழிலுஞ் செம்பொன்மா ளிகையும்
மேர்பெறு காரேு டிகலுமா மதிலும்
வசந்தமண் டபமும் வானுல களவாய்
உசந்தகோ புரமும் கோனிருமா மூதூர்
ஐந்து சபையும் ஆயிரக் காலின்
விந்தைமண் டபமும் விளங்கிய மூதூர்
அனைத்துய ரிளுக்கும் அருளினை யளிக்கும்
புனர்ச்சிவ கங்கைப் பொருந்திய மூதூர்
சிந்தைநைந் துருக்குஞ் சிங்கவன் மனுச்கும்
அருளினை யளிக்கும் ; ...
வந்தவெண் குட்ட மாற்றிய மூதூர்
பதஞ்சலி வியாக்கிரம பாதரும் பணிய
நிதந்தரு நடஞ்செய் நிமலனு ருரையூர்
ஒருமுனி மகனுக் குயரய் யோத்தியைப்

பருகென வழைத்துய பாலிக்கு மூதூர்
மிகதானம் புகழ்சேர் விராடப் புருடன்றன்
அகத்தா மரையின் அமர்ந்திடு மூதூர்
போன்றநும் பாவ புண்ணியஞ் செய்யினும்
ஒன்று கோடியதாய் உரைத்திடு மூதூர்
அருமறை முனிவர்மு வாயிரந் தம்மில்
ஒருவனாய் முதல்வர் உறைந்திடு மூதூர்
காசி தனக்குக் கயிலையென் ருகமம்
பேசிய மூதூர் பெரும்பற்றப் புலியூர்
பொருவில் புண்டரீகப் புரந்தரப் புலியூர்
மருவளர் தில்லை வனஞ்சி தம்பர
மன்னபி தானமும் பெத்த ரியனூர்
கோடி பவனமா ரிஷிகள் வணங்கும்
தெய்வத் தலமாம் சிதம்பரஞ் சீமையும்
வாவிதன் பனைசூழ் மன்னார் சீமையும்
சொந்தமாய்க் கடப்பை சுபாவினிற் சேர்ந்து
வந்தநாள் முதலாய் வரிவம் பில்லாமல்
பயிரிடுங் குடிமேல் பட்சம்வைத்துடல் வாழு
முயிரென யெவர்க்கு முதவியா தரித்து
ஈடில்லாக் குடிகளுக் கியன்றன வளித்து
மேடெல்லாம் நிரவி விரைத்திடென் றுரைத்துங்
கொள்ளிடக் கரைமுதற் கொண்டுவாய்க் காலும்
பள்ளமாய்ப் பறித்துப் பாச்சலுண் டாக்கி
விளைந்தநெற் குள்ள வீதமாய் வாரங்கள்
அளந்தனிர் கொடுத்து கவில்ப்படி நடத்தி
யெண்மலை புயத்தான் யினதுகான் சாயபு
கண்மணி யான காணுசாய பேந்திரன்
சுகசீவிய தாயத் துரைத்தினம் பண்ணி
மகனெனு மலாலுகான் வசத்தினி லளிக்க
அவனுமுன் னீதிக ளெண்மடங் காயும்
சிவனடி யார்க்குத் திரவிய மளித்தும்
பக்கிரி மார்க்குப் பாலமு தளித்தும்
திக்கெலாம் புகழச் செங்கோ லாண்டபின்
மம்முது கானும் வந்தமா லாண்டு
செம்மைதப் பாமல் தீர்வைக் குள்ள
பணமும்மேல் வாரப் படிநெல் லுள்ளதும்
பனமிச பாதி வாங்குறே மெம்போல்

மெல்லென வாங்கி மேதினி யெங்கும்
நல்லவ னெனவாழ் நாளினி லவன்பின்
வந்தமு தாமியா சாயபுமப் படியே
செம்பியன் போலும் செங்கோல் செலுத்தி
வாழும் நாளில் வஞ்சனை செய்யும்
மந்திரி நிபுணன் பெரியபெருமா ளிருந்து
நீதி வழாத நெறியே நடத்தி
ஆதியாம் புலிசை அனந்தீச ருக்குத்
திருப்பணி யனைத்துஞ் செல்வத்தே ரோட்டியும்
விருப்பமாய் வரந்தான் வேண்டிவாழ் நாளில்
இனத்துடன் கோட்டைக் கிளப்பம்வா ராமல்
கனத்தஇங் கிலீசு காரர்கள் வசமாய்க்
கொடுத்திட அவர்தன் கொடிநிலை நிறுத்தித்
துடுக்கறக் கோட்டைத் துரைத்தனஞ் செலுத்தி
இருந்திடும் போதி லெதிரியா யெழுந்து
பெருந்துயர் விளைக்கும் பிரஞ்சுக் காரர்கள்
சண்டையே செய்து சதியினற் கோட்டை
கொள்ளை கொண்டபின் வெள்ளைக்கொடியுமே போட்டு
தனக்கெதி ரொருவர் தானில்லா மையினல்
மனத்திட முள்ள மனிதர்க ளளவாய்
சீமையைக் கொடுக்கச் சிறிதுநா ளாண்ட
காமையா நீதி கார்த்திட்ட முண்டாய்
தினந்தினஞ் சூது திங்கள்கலை போல
மனந்தளர்ந் திந்த வஞ்சனைத் துரைகள்
ஐந்தாறு பேர்கள்வந் தமலினை யாண்டு
வந்திடும் நாளில் மறையவர் குலத்துச்
சாமரா யனுக்குத் தயவாய்ச் சிதம்பரஞ்
சீமையும் மன்னர் சீமையுங் கொடுக்கச்
சிறிதுநாள் நீதி செலுத்திய பின்பு
மறையவன் குடிகளை வரிகுடே ...ர்த்து
வலுமையைச் செய்து வாரக்காரர் வசமாய்
விலகவொட் டாமல் மேல்வீட்டில் வைத்து
உபத்திரம் செய்ய ஒருமித்தெல் லோரும்
அபத்தொனி வாராமல் அப்புறஞ் செய்வோம்
என்றுவாரக் காரர் எனுஞ்சே வுகரை
நன்றியாய்க் கேழ்க்க ராசிகள் செய்து

கண்டவர் தம்மைக் கயத்தினு லிறுக்கிக்
கொண்டுதான் சீமைக் குடியெல்லாம் விலகி
இருந்திடும் நாளில் இரப்பவர்க் கிருநிதி
தருந்துரை மமமுதலி கான்சாயபு
ஆனை குதிரை அணிவொப் டகம்வெகு
சேனையோ டெழுந்து சிதம்பரங் கோட்டை
வாங்கியங் கிருந்த மறையவன் றனைப்பிடித்
தோங்கிய தோரண மூரெங்குங் கட்டிச்
சிதம்பரஞ் சீமைச் சிவசிதம் பரனுக்
கசங்கிதம் பெறவளித்தவ னேகிய பின்பு
சிவசிதம் பரந்தான் சீமையிற் குடியை
அவமதி யாக அனீதியே செய்து
தெண்டம் பிடித்துத் தினந்தின முடிப்புக்
கொண்டுவா வென்று குடிகளை யடித்து
வதைத்திடும் நாளில் மறுசுபை யாகக்
கதித்திடுஞ் சூரங்கானு சாய பேந்திரன்
வந்தவ னன்பால் மந்திரி யாகத்
தந்திரி கனக சபைமக ராசன்
இருந்துகொண் டெவர்க்கும் இடுக்கண் வராமல்
திருந்திய சீமையிற் தெண்டமில் லாமற்
காய்க்கும் பலனிற் கண்டநெற் குள்ள
வாரப் படியே வாங்கிக் கொடுத்து
முன்பின் நடந்த முறமை தப்பாமல்
அன்புடன் நடத்தி ஆதரித் தெவர்க்கும்
நல்லவன் எனவே நாற்றிசை யெங்குஞ்
சொல்லவே நீதி துரைத்தனஞ் செலுத்தி
வந்திடும் நாளில் வஞ்சனை மிகுந்த
சிந்தனை யுடைய சிவசிதம் பரனும்
மறுபடி சுபைக்கு வந்துதா னீதி
நெறியது தவறி நெருப்பெனச் சீறி
குடிகளை யெல்லாங் கொண்டுபோய் மறித்து
படுதெண்டம் பிடித்துப் பணம்வாங் கியதை
இந்நிலத் துள்ளோர் யாவரும் வியம்ப
பன்னுசெந் தமிழால் பாடலுற் றனனே.

## விருத்தம்

பாட்டாசை யால்மூவர்க் கருள்நடேசர் பதியான
சிதம்பரஞ் சீமையிற் பண்பதாக
நாட்டாமை செலுத்துகின்ற தேயவ ராயன்
நர்பால ஞெருவரையும் நம்பியங்கே
சாட்டாமல் அரண்மனை வாசலுக்குத் தானோர்
தனிச்சிங்கம் போலிருந்து குடிகடம்மைக்
காட்டாம லேதுகவையும் நிறுவாகித்துக்
கண்டவர்க ளதிசயிக்குங் காலைதன்னில். (க) (1)

குடிகளுக்கும் வருத்தம தில்லாமலச் சீமைக்
குத்தகைக் காரனுக்கும்நிதி குறைந்தி டாமல்
அடிபிடி யில்லாமல் வரிவம் பில்லாமல்
அனியாய மென்றிடுஞ் சொல்லது வில்லாமலப்
படிபுகம் வாரமும் தீர்வைப் பணமுமுன்பின்
படிநடந் தப்படி திட்டப்படி நடத்தி
வடிவினில் மன்மத ரூபன்தெய்வ ராயன்
மகிபதி நாட்டாண்மை செய்துவாழும் நாளில். (2)

பெருமைபெறு மம்முதலி கானுசா யபைப்பேட்டி
கண்டுச் சீமையைக் குத்தகையாய் வாங்கி
உரிமையுடன் வந்துசிவ சிதம்பரன்ருன் ஊர்க்குடியெல்
லாமறித்து வரியைப் போட்டுத்
தருமநெறி தவறிரொக்கந் தாதாவென்று தானடித்துத்
தவணையதாய்த் தனமும் வாங்கி
வருகையி லுய்த்தியந் தூருயக்கானு சாயபும்
வந்திட்டான் தோரணமும் வைத்திட்டாரே. (3)

தோரணம் வைத்திடுங் கானுசா யபுபக்கல்
துரத்தினமாய்க் கனகசபை ராசதீரன்
பார்மகிழ விருந்துகொண்டு சீமைதிட்டப்
படச்செங்கோல் நடத்திக்
கார்ப்பலனுக் குள்ளவாரம் வரிகளுள்ளதும்
குடிகளுக்கீந்தும் நானங்கொருநாளிர்க் கானுசாயபும்
சீர்பெறும் பத்தாயிரம் பொன் வாயிதாவாய்
சீமையின்மேல் வரிபோடச் சிந்திந்தானே. (4)

அம்மொழியைக் கனகசபை ராசன் கேட்டு
அய்யய்யோ யிதுபாவம் ஆருலாகுஞ்
செம்மைதவ றினபோதை யினிஞ னுன்பால்
சேரேனென் றவனிருந்த சேதிகேட்டு
நம்முடைகை வசமாகச் சீமை தந்தால்
நாலுலட்சத் தெண்பதி ஞயிரங் காண்பிப்பேன்
சம்மதியோ வென்றுசிவ சிதம்பரன் தனித்து
வினவினன் கானுசாயபைத் தானே. (5)

அல்லாவின் பாதமறவாக் கானு சாயபும்
அப்படியே குத்தகையாய்ச் சீமைதன்னைப்
பொல்லாத சிவசிதம் பரனுக்கே யீந்து
போதில் மன்ஞர்சீமை நாட்டார் தாமும்
வல்லாண்மை யாகவொத்துப் பேசிக் கொண்டு
வரிப்போடச் சம்மதித்த வார்த்தை யார்க்குஞ்
சொல்லாமல் கச்சேரிதனி லிருந்து கொண்டு
சுபைக்காறு பாறுசெய்யுந் துகைசொல் வேனே. (6)

தன்னைப்போல் மனதினில் வஞ்சகனைத் தேடி
சம்பிறிதி தன்னில்வைத்தான் தயவில் லாமல்
பொன்னைத்தான் குடுகுடென்றே அடித்து வாங்கும்
புலமையுள்ளோர் தனைத்தேடி யவர்வில் வைத்தான்
பின்னைத்தா ரோமெனச்சொன் ஞலுங் கேளான்
பிடிவாதக் குணங்களுள்ள பேராய்த் தேடி
சென்னேர்சூழ் கிராமமெங்கும் மணியம் வைத்தான்
சேவுகர் பொல்லாதவராய்ச் சேர்த்திட்டானே. (7)

இப்படியாய்ச் சீமைதிட்டப் படுத்தி யூருக்
கிரண்டிரண்டு சேவுகரைச் சோடுகட்டி
மெய்ப்படியாய் நீங்களும்போய்த் தேடிப் பார்த்து
மேலான பசுங்குடியெல் லாம்வி டாமல்
கைப்பிடியாய்ப் பிடித்துவரு வீர்க ளென்று
காதுக்குள் சுபையதராய்க் கழறும் போதில்
அப்படியே குடியானவரைக் கண்டும்மை
அழைக்க வந்தோம் வாருமென அழைத்திட்டாரே. (8)

ஏனழைக்குறீர் சுபைய தாருமும்மை
யிக்கணமே அழைக்கிறு ரென்ற போதில்

போனவிசை சுபைக்குவந்து வரியைப் போட்டுப்
பொன்வாங்கி னிமதருமைப் புலமை யெல்லாந்
தானறிவான் கடன்வாங்கிப் பயிரே செய்த
சம்மதியு மறிந்திருப்பான் தயவாய் நம்மேல்
மானம்வைத்து நடப்பிப்பா னென்றே நம்பி
வந்திட்டா ரழைப்பவர்முன் வலியந் தானே. (9)

வந்தார்கள் குடிகளெல்லா மெனவறிந்து
வாரக்காரர் வசமாக மறியல் வைத்துச்
சந்தோஷ மாகமன்னர் சீமை நாட்டார்
தனையழைத்தா லோசனையுந் தனித்துப் பேசிப்
பிந்தாம லிக்கணமூர் கணக்கர் தம்மைப்
பிடித்துவந்து தரப்பிடியும் பிராக்குக் கிவ்வாண்
டந்தந்த ஊர்ப்பயிர்கொண் டிடுங் கணக்கை
அவரவர்க ளெழுதுமென அறைந்திட் டானே. (10)

இங்கிருந்து கணக்கெழுதப் போமோ நாங்கள்
எல்லவரும் அவரவரூர்க் கேகித் தானே
அங்கங்கே பயிரேறும் நிலங்கள் கோலிட்
டளந்துபயி ரொழுதெழுதி அய்யா உங்கள்
செங்கையிலே தருவோமென் றுரைத்த போதில்
சேவுகரை வாவிவரைத் தெருவிற் றள்ளிப்
பங்கமது செய்துபயிர் கணக்கும் வாங்கிப்
படிசன்னதுக் கொருபணமும் பத்து வீரே. (11)

நல்லதய்யா வென்றுசலாம் பண்ணிக் கொண்டு
நாயக்கர் பாடிகளும் கணக்கர் தம்மை
அல்லல்செய்து குனியவைத்து முண்டா சாலே
அண்ணுந்தாள் போட்டுமுது கதனிற் றூக்கிக்
கல்லைவைத்துக் கிட்டிகட்டி அடித்து மெத்தக்
கண்டித்த போதிலிந்தக் கடினம் பண்ணிக்
கொல்லுவ தென்னினிப்பொறுக்க முடியா தென்றே
குருட்டடியாய்க் கணக்கெழுதிக் கொடுத்திட் டாரே. (12)

அக்கணக்கை வாங்கியபின் கிராமந் தோறும்
ஆமிஷங்கா ணுங்கணக்கை யடித்து வாங்கிக்
கைக்குள் வைத்துக் கொண்டுநெல்லு காண்பதெல்லாம்
கணக்காக்கி யுட்வார முதலாய்க் கூட்டி

முக்குறுணி நானுழி விலேக்கி மூணு
    லட்சமாச் சுதுகுத்தகைக்குக் காணத்
தக்கநஷ்டி வந்ததெல்லாம் பார்க்க லட்சந்
    தனக்குமேல் ஒன்பதினு யிரந்தா ஞச்சே. (13)

நஷ்டிலட்சத் தெண்பதுக்கு மன்னர் சீமை
    நாட்டாரை வருஞ்சுபைய தாருங் கூட்டிக்
கிட்டியிருந் தந்தரங்கம் பேசிச் சீமைக்
    கெடுப்பதற்குத் துணிந்ததனைக் கேளீ ரந்தப்
பட்டயத்துக் கையெழுத்தைப் போட்டுத் தாரோம்
    பணந்தாரோம் சிதம்பரஞ் சீமையினுர்க் கையில்
திட்டமுடன் கையெழுத்தை வாங்கு மென்றே
    செப்பினரப் பொழுதுமன்னுர் சீமை யாரே.

இத்தனையோ சனைகள்பண்ணி முடிந்த பின்பு
    எழுந்துயர கச்சேரியில்வந் திருந்துக் கொண்டு
பத்தலர்கள் பணிந்துசிங் கமநாட்டுத் தானு
    பதிவெங்கிடா சலய்யன் தன்னைத் தானே
மெத்தையரு கிருத்திவைத்துக் கொண்டு கையால்
    மேற்றடவி முகமனுரை வினவிப் பின்பு
குத்தகைக்குக் கையெழுத்தைப் போட வேணும்
    குடிகளையு மழையுமெனக் கூறு வானே.

கிரிதனில் வைத்திருந்த குடியான பேரைக்
    கிட்டவழைத் தருகிருத்தி வைத்துக் கொண்டு
அரியசிவ சிதம்பரனுஞ் சொல்வா னஷ்டி
    அமர்க்கார ஞேகொடுப்பான் சீமை மீதில்
வரியெழுதிக் கொடுத்தல்லோ தீர வேணும்
    மறுத்துரையாய் தீருமது வருத்த மெல்லாம்
தெரியுமேலுக் குடன்வாங்கிக் கொள்வே னிந்தச்
    சீட்டிலொப்பம் போடுமெனச் செப்பி ஞரே.

## சுபையதாருக்கும் குடிகளுக்கும் வாக்குவாதம் நடக்கிற

### தரு

குத்தகை நஷ்டிக்குக் கொடுக்கிறோம் பணமென்று
ஒத்திந்தச் சீட்டினில் ஒப்பத்தைப் போடும்
போடுமென்று சொல்லப் போடுஞ்சுபைய தாரே.

சூடுபட்ட பூனை சுத்துமோ அடுப்பை
அடுக்குங் காணும் நீங்கள்
ஆளுக்கெவ் வளவு
கொடுக்கப் போறீ ரிது
கொஞ்சங்காரி யங்காண்
காரியந்தப்ப வோர் காரியம்நீர் செய்தால்
மாரியு மறுத்திடும் வலுவந்தம் வேண்டாம்
வேண்டாமென்று லுன்னை
விடுவேனோ ஒருக்காலே
பாண்டித மேதுக்கெப்படியும் வாங்குவேனே.

வாங்குவே னெனச்சொல்லி மறித்தா லெங்களாலே
தாங்காது காணிது தர்ம மல்லவே.
தர்மமேது பாவந் தானேது குடிகளைப்
பொருள்மே லாசைவைத்த புரவலன் தனக்கு
தனக்குப் பேரனுங்கள்தா னல்லவே உந்தன்
மனப்படி நடந்திந்த வரிப்பணங் கொடுக்க.

கொடுக்கா விட்டாலும்மைக்
கொஞ்சத்தில் விடுவோமோ
தடுக்க வேண்டாம் போட்டுத்
தாருங்கை யெழுத்தை
கையெழுத்தை வாங்கிக்
கட்டிக்கொண் டெங்களைச்
செய்யாத பாடெல்லாஞ்
செய்யவோ நினைவு.

நினைவுப் படியில்லை நீதிசேரும்வகை
நீங்களனைவரும் சம்மதித்தாலிதெவ்வளவு

எவ்வள வானலும் எங்களால் ஆகாது
அவரவர்க் குடித்தனம் அவர்க்கல்லோ தெரியும்

தெரியுங்காணுமிந்தத் தில்லும்பில்லும் நீங்கள்
வரிகொடுத்து மெத்தமனஞ் சலித்தீரோ.

தீராத கோபத்தைச் சிந்தைமேல் வைத்துப்
பாராமல் பேசினல் பயப்படு வோமோ.

ஓமென்று கையெழுத் தூணுங் காணும் இனி
நாமென்றும் நீரென்றும் நடத்தைரெண் டுண்டோ
உண்டானல் குடுக்கமோ
உறவாடிக் கேட்டாலும் தண்டித்துக் கேட்டாலும்
செப்புவதென்றே.
முற்றும்.

## சுபையதார் சொல் விருத்தம்

ஒருதுணிவாய்ப் பிடிவாதம் பிடித்தீருமோ
டொப்பந்த மாகுமன்னர் சீமையார்கள்
தருகிரே மெனவொத்துக் கொண்டே சீட்டு
தந்திருக்கச் சேநீங்கள் தாறுமாருய்ப்
பருவமது பார்த்திரண்டு தங்கள் மட்டும்
பாராட்டிப் பாழும்நிலே பார்த்தீர் இந்தத்
திருகணிமேல் நடவாதென் னெழுந்து சீறிச்
சினத்ததுகண் டேகுடிகள் செப்பு வாரே.

## விருத்தம்

தங்கிய மன்னர்சீமைநாட் டார்தான்
இருந்தல் லோயெழுதித் தந்தா ரிப்போ
எங்கள் சீமைநாட்டார் தமையல் லாமல்
எப்படிகுத் தகைநாங்கள் ஏத்துக் கொள்வோம்
உங்களுக்குத் தெரியாதகவை யுண்டோ வென்று
உரைத்தளவில் அவரைவிடப் பதிம டங்காய்
வெங்கிடா சலய்யன் இருக்க நீங்கள்
வேருலோ சினேகள் பண்ண வேண்டா மென்ருன்.

### விருத்தம்

எந்தவிதங் குடிகள்சொல்லித் தப்பித் தாலும்
எதிர்மொழியாய் எவர்களும் வாயெடாமற் கட்டி
தந்திரத்தி னலுமன வலியினலுந்
தனத்தாசை மனதில்வைத்து தண்மையாலும்
வந்துமறியிலி லிருந்த குடிகள் தம்மை
வதைத்துயிர்கள் பதைத்திடவே வருத்தும் போதில்
இந்தவகைக் கண்டு வெங்கிடா சலய்யன்
னிடற்றுவானே யென்னெனக்கை யெழுதிட்டானே.

### விருத்தம்

மறையவன்கை யெழுதததன்னை வாங்கிக் கையில்
வைத்துக்கொண் டினிநமது மனதிலுள்ள
குறைகளெல்லாந் தீர்ந்ததென்றே மகிழ்ச்சி கூர்ந்து
குடிகளையும் கெட்டிபண்ணிக் கொண்டு பின்பு
நிறையுடனே சீமைதனி லறுப்பு விட்டு
நெல்லுவித்துப் பணமாக வேணு மென்றே
மறுமொழி பேசுவ தென்முன்போய் கிராமத்துள்ள
மணியக்கா ரரையழைத்து வாவென் றனே.

### வசனம்

சுபையதாரானவர் குத்தகைப் பட்டயத்துக்குக் கையெழுத்தை வாங்கிய பிறகு மகிழ்ச்சி கூர்ந்து சொல்கிருர். இனிமேல் நடக்க வேண்டியது சீமா மூலம் பலச்சேதம் வராமல் அறுப்பு விட்டு தானியம் ஒப்படிப் பண்ணி ஒப்படியான தானியங்களெல்லாம் அண்ணைக் கண்ணுடம் விலைக்கிரையம் பண்ணி பணம் வந்து சேர வேணும். கிராம கிராமங்களிலே உண்டாகிய மணியக்காரரை யெல்லாம் அழைத்து வாருங்கோ ளென்று சொன்னர் சுபையதாரர்.

### விருத்தம்

ஓடியே கிராமந் தோறும் உண்டான
தரப்புத் தாரை
தேடியே அழைத்து வந்து சேவுகர்
விடும்போதில்

நாடியே சுபையதாரும் நவிலுவா
ரறுப்பு விட்டுக்
கூடியொப் படியாக் கென்றே கூறியே
புத்தி சொல்வார்.

## வசனம்

கிராமங்களிலே உண்டாகிய மணியக்காரரை யெல்லாம் சேவுகர் போய் அழைத்துக் கொண்டு வந்து சுபையதார் முன்னே விட்ட போது மணியக் கூட்டங்களைப் பார்த்து சுபையதார் சொல்லுகிறுர் சீ மாமூல் மறுப்பு விட்டுப் பலனெப்படிப் பண்ண வேணுமே அதுக்குத் தலத்திலே நடக்க வேண்டிய பக்குவங்களெல்லாம் புத்திப் போதிக் கிறேம் கேளுங்கோள் மணியக் கூட்டங்களே.

## தரு

மணியக்கார ரெல்லாம் வாருங்காணும்
தன்னைமறந்தோடித் திரியாதீர்
மனத்துணிவினுலே குடியாளவருமன கூடிச்
சொர்க்கம் புரியாதீர்.
(மணியக்காரரெல்லம்)

கலத்துக்குக் குறுணிநெல் பாடுவரவளந்து
கணக்குமெழுதுங் காணும் நீங்கள்
தலத்துப் பருவமெனக் கடிக்கடி ஓலையிற்தானே எழுதுங்காணும்
(ஊர் மணியக்காரரே)

களப்பிட்சைக் கதிர்ப்பிட்சைப் போடவேண்டாம் வெகு
காறுபாரிலோங்கும் களம்அளப்பிச்ச பிறகந்த
நெல்லைக் குடிகள்மேல் விட்டடித்துப் பணத்தைவாங்கும்
(ஊர் மணியக்காரரை)

சிணத்துக்குச் சிணஞ்சித்தம் போதிக்கக் குடிகளும்
சேனைதந் திரமுரைப்பார் பத்துப்
பணத்தைக் கொண்டுவந்து கொடுத்து மயக்கி
யல்லும்பகலு முங்களைக் கரைப்பார்
(ஊர்மணியக்...)

சோலி மெத்தவுண்டு சொன்னேனம் பாரதில்
துடுக்காய்நெல் லெடுக்காதீர்
ஆள்கூலி மாத்திரம் நீர்கொத்துக்
குடிகளுக்குக் குறுணிநெல் கொடுக்காதீர் (ஊர் மணியக்...

ஊமைப்பேய் பித்தர்போல் இருக்காதீர் களத்திற்
களத்திலுக்கிரமாக நில்லுங்கோள்
ஒருசாமப் பொழுதிருக்கக் களமளந்து
பணந்தஷத்துப் பண்ணச் சொல்லுங்கோள்.
(ஊர்மணியக்காரரே)

கண்டுமுதலிலொரு சுறங்காய்நெல் குறைந்தாலும்
கண்டாக்கால் விடுவோமோ.
இருதுண்டமாகவெட்டக் கழுவில் வையாவிட்டால்
சுபையதாரு நாமோ? (ஊர்மணியக்காரரே)

நடவுங்காணு முங்களுருக்குத் துக்ககாரர்
நாளை வருவாருவாரனீரும் அவருடனே
கூடிவயல்சுத்திப் பார்த்துத்துகம் உள்ளப்படிக்கிப் பாரும்
(ஊர்மணியக்காரரே)

தரு முற்றும்.

## வசனம்

சுபையதாரரானவர் கிராமத்து மணியக்காரரையெல்லாம் கிட்ட அழைப்பித்து இரண்டு இரண்டு பேராய்ச் சோடுகட்டி அனுப்புகிற போது அந்தத் துக்கக்காரரை யெல்லாம் கிட்ட அழைத்துச் சிறு புத்திகளைச் சுபையதாரர் போதிக்கிருர்.

### இது ஆனந்தக் களிப்புச் சீராய்ப் பாடியது

துகம் பார்க்கப் போறநீர் வாரும் புத்தி
சொல்லுறேன் வழுவுதல் இல்லாமல் பாரும். (துகம்)

பொருளுக் காசைவைக் கொண்ணுது வெஷ்க்கம்
போய்விடுஞ் சொன்னேன்பின் போனல்வராது பருவம்
அடிக்கடி வந்தோதும் நீங்கள் பாத்த
புள்ளியும் வந்து பார்ப்போ மிப்போது.

கதிர்வயலெங்குஞ் சுத்தும் னூறு
காணும்போ லிருந்தக்கால் காலதிட்டம் உசுத்தும்
சதிசெய்ய லாகாது சத்தும் உள்ள
சம்பளங் கைமீதிற் தருகுரேம் பத்தும்
நெய்யும் பருப்புஞ்சோறு முண்டு சூது
நினையாதீர் குடிகளை நீங்களுங் கண்டு

கையாடை தனைவாங்கிக் கொண்டு சத்தை
கள்ள ... சவுக்கடியுமக் குண்டு. (துகம்)

விருத்தம்

புத்திசொல்லித் துக்கக் காரர் தம்மை
அனுப்பிவிட் டதற்பின்பு துக்கம் காணம்
வைத்தறுப்பு விடவேணுஞ் சேவுகரை
அழையுமென்ற வாறு கேட்டு
கத்திசமு தாடுதடிக் கம்பிளிகே டயம்
எடுத்துக் கங்காணிகச்
சுத்தனென வந்துநின்ற நாயக்கர் தமக்குரைப்பர்
சுபைய தாரே.

வசனம்

துகக் காரருக்குச் சொல்லவேண்டிய சமாச் சாரமெல்லாம் சொல்லி கிராம கிராமங்களுக்கு அனுப்பிவிட்டுப் பிறகு அங்கங்கே கங்காணம் அனுப்பி வைக்க வேணுமே அதுக்குப் பொறுக்குச் சேவுகருய்ப் பார்த்து அனுப்பியும் அவாலு தாரேயென்று சுபையதார் சொல்லுகிருர்.

தரு

கங்காணத்துக்குப் போற நாயக்கரே உங்கள்
கைப்ப .. பெல்லாமறிவே நாயக்கரே

யிங்கடாதந்த பாம்பு நாயக்கரே நீங்கள்
எல்லாரும் கேளுங்காணு நாயக்கரே

தனிக்கங்காண ... யிராதி நாயக்கரே சோடு
தான்சேந்திருக்க வேணும் நாயக்கரே

மனிதர்கவட்டை விட்டு நாயக்கரே விசு
வாசத்துசனிரு ... நாயக்கரே

குடிகளுடனே கூடி நாயக்கரே நெல்லைக்
கொள்ளையிட்டது கண்டால் நாயக்கரே

அடிபிடியில் நில்லாது நாயக்கரே உயி
ரளவிருதி ... முடியுங்கண்டீர் நாயக்கரே

களத்திலே வயலிலே நாயக்கரே ஒரு
கதிரளவில் போனல் நாயக்கரே

இளப்பமோ அதுவெல்லாம் நாயக்கரே—வெட்டி
பெறிவேனிரு துண்டமாய் நாயக்கரே

இருட்டுகள மளந்தால் நாயக்கரே—பீன்கட்
டிருக்கி கட்டியடிப்போம் நாயக்கரே

திருட்டுக்கிடங் கொடாதீர் நாயக்கரே—உங்கள்
சேவுகந்தூறு செய்வோம் நாயக்கரே

விடியாக் காலத்தெழுந்து நாயக்கரே—வயல்
வெளியெல்லாம் சுற்றிப்பாரும் நாயக்கரே

படியசும்மா யிராதீர் நாயக்கரே—உள்ள
பஞ்சமதிதன்னே வாங்கும் நாயக்கரே

கல்லுக் கரிக்காயென்றும் நாயக்கரே—முன்பின்
களவாசந் தானுண்டென்று நாயக்கரே.

மல்லுகட்டிக் கேட்டாலும் நாயக்கரே—ஒரு
மணிநமுவ வொட்டாதீர் நாயக்கரே

நெல்லாசை விட்டுவிடும் நாயக்கரே—மூண்டு
நேரமமுது கொள்ளும் நாயக்கரே

பொல்லாத காலங்காணும் நாயக்கரே—புத்தி
யுண்டாய்ப் பிழையுங்கோள் நாயக்கரே.

தரு முற்றும்

## விருத்தம்

இந்தமொழி கேட்டளவில் சேவுகரும் நல்லதையா
வென்றே ஊர்க்கூர்
வந்துதுகம் பார்த்துப்பலன் அறுப்பு விட்டுக்
களமளந்து வருமப்போதில்
அந்தமனிதர்கள் மனதை நம்பாமலச் சோதினேக்கா
ளனுப்பும்போதில்
சுந்தரஞ்சேர் சீர்மையெங்கும் தாபத்துக்
காரர்வந்து தோன்றினரே.

## வசனம்

சுபையிலே யிருந்து களங்காடு சோதினேக்குத் தபாத்துக்காரர் வருவது.

திரு

பட்டடை சோதிக்க நிலங்களளந்துப் பார்க்க
பொய்யை மெய்யாக்கவே படுகட்டுதலேச் சொல்லி
வெட்டத் தபாபத்துக் காரரும் வந்து தோன்றினுரே.

மெள்ளவந்தொரு போரிடுக்கில்வேலே செய்தவர்போல் யிருந்து
கள்ளர் போலவே யெழுந்து சோதினேக்
காரரும் வந்து தோன்றினுரே.

ஒளித்துக் கொண்டொரு பட்டடைச் சந்தினில்
ஒதுங்கி மெத்தனப் பதுங்கி யிருந்து
களத்துப் பருவமறியச் சோதினேக் காரரும்
வந்து தோன்றினுரே.

வசனம்

இப்படியாக வந்த சோதினேக் காரர் செய்யும் வயனம்.

விருத்தம்

பட்டடைதன்னேச் சோதிப்பார்
பதருக்குள் கையைரோயட
விட்டள்ளி தூத்திப்பார் வீணிலே போரில் நெல்லேக்
கொட்டிவைத் திருக்குதென்பார் கொள்ளேயோ வெ.ைபாரிந்தச்
கட்டுவாறதை கவளச்சொல்லி கலக்குவார் மலக்குவாரே.

இயத்தியகாறு பாரியெலியேறும் போருநெல்தீண்ட
பயப்படச்சீமை கட்டுப்படுத்தியே சுபையதாரும்
செயப்படக் குடிகள்தம்மைச் சேர்த்துக் குத்தகை நஷ்டிக்குப்
பயப்படச் சீமை மீதில் வரிப்பிரித் தெழுதுமென்ருன்.

வசனம்

இப்படியாக வந்த தபாத்துக்காரரை அங்கங்கேயனுப்பி ஒரு எலீ எறும்பு முதலாய் ஒரு நெல்லு மூக்கைத் தீண்டாமல் அச்சீமையைக் கட்டுப் படுத்திப் பிறகு வாராவிலே வைச்சு இருக்கிற குடிகளே யெல்லாம் அழைத்துக் கிட்டவைத்துக் குத்தகை நஷ்டிக்கு வரி பிரித்துக் கணக்கெழுதித் தாருங்கோ ளென்று சுபையதார் சொல்லு கிருர்.

கவி

நாட்டுக் கணக்கர்தமை யழைத்து நன்ருய் நீங்கள்
வரிக்கணக்கோர்
சீட்டிலெழுதித் தாருமென்றே சீமைச் சுபையதார்
கேட்க ஏட்டைப்

பேட்டிப் பார்த்துப் பேர்எடுத்த வரியும் பிரித்தெழுதிக்
கூட்டித்துகை யிட்டவர்க்கரத்தில் கொண்டார் வாங்கிக்
கொண்டாரே.

வசனம்

குடிகள் ஒருத்தருக்கொருத்தர் ஆலோசனே பண்ணிக் கொள்ளுகிறது.

கவி

வரிக்கிடாப்பின் வாங்கிய போதினில்
உரிச்சிடாமல் விடானிதற் குண்மைகேள்
தரிச்சருமல் நபாபுக்குச் சாத்தவே
திருச்சிராப் பள்ளிக் கேகுகின்ருர்சிலர்.

விருத்தம்

நல்லதுநா மிவனியத்துக் கொடுமை யெல்லாம்
நபாசாயபும் மமுதல்லி கானுச்சாய புக்குச்
சொல்லியறி வோமெனவே நினைந்து தெய்வம்
தொழுதுசில குடிகளும்நாட் டாருங் கூடி
எல்லவரும் திருச்சிராப்பள்ளிக்கிப் போதேகி
இணங்கது விருக்க யிவனுஞ் சிறிக
கல்லினும்பொன் னன்று விடுவார்காரர் தம்மைக்
கடுகவழைத் துபதேசங் கழறுவானே.

வசனம்

வா ... ராவ ... சிறிது குடிகள் மரியலிருக்கச் சிறிது குடிகள் கூடிக் கொண்டு நாட்டாரவர்கள் அண்டைக்கு வந்து இவன் செய்யுற கொடுங்கோன்மை நடத்தையெல்லாம் அசறதுன்பா சாயபுக்கு அறிக்கைப் பண்ண வேணுமென்று சொன்ன மாத்திரத்திலே அப்படியே போவோமென்று ராயஸ்ரீ நாட்டார் அவர்களுஞ் சிறிது குடிகளுங்

கூடிக்கொண்டு திருச்சிராப் பள்ளிக்குப் போனுர்கள். அது விபரம் அப்படியிருக்க இப்பால் இவ்விடத்தில் வர்த்தவானம் சுபையதா ரானவர் வார்ச்சிப்பாய்களை அழைத்துக் கிராமகிராமங்களுக்குப் போய் பணந்தண்டலாகப் பண்ணி வாருங்கோளென்று அனுப்புவிச்சுப் பின்னையும் அங்கங்கே பணந்தண்டப் போறச் சேவுகருக்குச் சுபையதார் சொல்லுகிருர்.

கவி

இதத்தாலே பணமுளது வாங்கினுலுஞ் சரிதான்
எட்டி மார்பி
லுதைத்தாலுஞ் சரிகுடியை வதைத்தாலுஞ் சரியடியா
லுயிர்தொண்டைக்குள்
பதைத்தாலுஞ் சரிகடினம் பண்ணினுலுஞ் சரிதான்
பணந்தான் எந்த
விதத்தாலுந் தினந்தினமுங் கெடுப்படிக்கிங்
கனுப்பிவைக்க வேணும் தானே.

அடியுங்கோள் சாண்கயத்தில் கிட்டியும் போட்
டமுந்தத் தொக்கால்
பிடியுங்கோள் நடுமுதுகில் பெரியகருங் கல்லைவைத்து
யிடுப்புஞ் சந்தும்
ஒடியுங்கோள் குறடாக் கொண்டுரியுங்கோள்
குடுபண மென்றுரிக்கி மூக்கைக்
கடியுங்கோள் தினக்கெடுவில் அரைக்காசுங் குறையாமல்
கட்டுங் கோளே.

தரு

வார்ச்சிப்பாபதிர் நீங்கள் கூச்சப் படவேண்டாங்
கிட்ட வாருங்கோள் கிராமஞ் சேருங்கோள்.

பேச்சுமூச் சறியார் போலே
காச்சு பீச்செனவே யதட்டிப்
பேசுங்கோள் பேசி யேசுங்கோள்
குடிகளையெல்லா மறித்தொரு நொடியிலே
பணங்கட்டென்று குத்துங்கோள் - ரோசு
பத்துங்கோள்

துடிதுடிப்புடனே நித்தம் படிமுடிப்புள்ளதுங்
கட்டச் சொல்லுங்சோர் - உருக்கி - நில்லுங்கோள்

ஒச்சலாயிருந்தா லுங்கள் பேச்செல்லாங்
கல்லேயாய்ப் படியும்
ஒழுகிப்போம் பண முழுகிப்போம்.

காச்சலா யெழுந்துவேளே ஆச்சுதே பாரென்று
யிருத்துவிட்டுக் கிட்டி கட்டுங்கோள்
எட்டிக் குட்டிக்கொள் பொழுதுக் கெதிரே
அண்ணுத்திப் பழுதைக் கய்த்தால் குனியப் போடுங்கோள்
சவுக்காற் சாடுங்கோள்
எழுதின வரிப்பணங்கள் மூழுதுந் தணவந்தால்
பிழைப்பீர்களே சிப்பாய் மார்களே.

## வசனம்

இப்படி சுபையதாரானவர் சொல்ல இதற்கு மறு உத்தாரம் சேவுகர் சொல்லி அனுப்பி வைச்சுக் கொண்டு கிராமங்களுக்கு வருவது.

## விருத்தம்

நல்லது சுபைய தாரே நாங்களு மங்கங் கேதான்
ஒல்லேயில் சென்றே ரொக்கம் உள்ள தனுப்புகிறே மென்று
சொல்லியே தோளிற் தூக்குந் தூக்கியே கிராமந் தோறும்
வல்வினேச் செப்பு சிப்பாய் மார்களுந் தோன்றி ஞரே.

வார்ச்சிப்பாய் மார்வந்தார் பணந்தண்ட
வார்ச்சிப்பாய் மார்வந்தார்.

வார்ச்சிப்பாய் மாரும்வந்தாரே ஊரெங்கும்
உச்சிதமாய்ப் பணம் உள்ளதடித்து வாங்க

கொக்குக் கூட்டமொரு ராசாளியைக் கண்டு
குலே நடுங்குவது போலே—குடிகளே
வதைத்தீர் கண்டு உக்கிரமஞ் செய்து ரொக்கம்
ஒண்ணரைக் காலத் துண்டு—ஒழுகாமல் அறுவிட
ஊருக்கிரண் டிரண்டு—(வார்ச்சிப்பாய்)

நெத்திமீதிற் கீத்துநாமம் போட்டுக் கொண்டு
நிண்டு தியக்கங் கொண்டு ஊரைக்கேட்டுக் கொண்டு

தத்தித்துத்திற் தோளிற் கத்திமாட்டிக் கொண்டு
தரப்புத்தரற்குப் பணம் தண்டச்சீட்டுக் கொண்டு
(வார்ச்சிப்பாய்)

இறுக்கிச் சல்லடமும் தொட் டிடுப்பிற் கச்சையும் சுற்றி
எனக்குள்ளபடி ரோசையிங்கே போடெனப் பத்தி
முறுக்கி வீணே கொண்டாணே உறுக்குச்சப் படுத்தி
முறிந்த படையைக் கண்டால் முனைந்து துறத்திக் குத்தி.

விருத்தம்

சீட்டது கொண்டு வந்த சேவுகன்தரப்புத் தாற்கு
காட்டியே குடிகளெங்குங் காண்பியு முடிப்புக் கட்டித்
தோட்டிதனிற் கொடுத்துச் சுருக்கில்நா மனுப்பா விட்டால்
நாட்டுமுன் தூப்புந் தூருய் நமதுசேவுகமு மாமே.

என்றுவார்க் காரர் சொல்ல இருந்ததோர் தரப்புப் தாரு
நன்றென விசைத்துக் கொண்டே நகரில்வாழ் குடிகள் வீட்டில்
சென்றுநீ ஆள்மாகாணச் சேவுகர் அழைத்தோர் பக்கல்
இன்றுதான் கூட்டி வைத்திங் கெனக்கும் ஆள்அனுப்பு வாயே.

வசனம்

அகோ வாருங்கோள் ஆளமாகாணச் சேவுகரே! அரண் மனேயிலே யிருந்து உமக்கு சருராய் வார்க் காரர்சீட்டுக் கொண்டு வந்து இருக் கிருர்கள். இரண்டு நாழிகையிலே முடிப்பு ஆகப் பண்ணி அனுப்பிக்க வேணும் குடிகளே யெல்லாம் சீக்கிரத்துக்கு அழைத்து வாருங்கோள் பிள்ளாய்.

அப்படியே அழைத்துவருகிறேனேயா தரப்புத் தாரரே.

தரு

ஓடியின்னேரமே ஊரினிற் குடிகள் தன்னேத்
தேடியே யழைத்துக்கொண்டு திலும்புவேனே.

நல்லதன மாகச் சொல்லி நாழிகையொன்றிற் குடியை
வல்லமை யுடனழைத்து வருகுவேனே.

காரியம் உண்டு நீங்கள் கடுக எழுந்திருந்து
வாருமென அழைத்து வருவேனே.

## விருத்தம்

ஒத்தைஒ ரனேயே ருள்ளோர் ஒருகுழி மண்கோட் டாலே
கொத்தியே பயிர்செய் கின்ற குடிகளே யெல்லாங் கூட்டி
வெத்திசேர் தரப்புத் தார்முன் விடுத்திட வரிக்கு வந்த
மூத்திரைச் சீட்டைக் காட்டி முடிப்பது கட்டு மென்ருர்.

வரியென்று தந்த சீட்டை வாசித்துப் பார்க்கு முன்னே
எரிகின்ற வயறு மெக்க மெண்ணியே நெஞ்சுந் தண்ணீர்
சொரிகின்ற விழியும் வாழ்க சோர்ந்திடும் முகமு மச்சம்
புரிகின்ற மெய்யு மாகிப் புலம்பினர் குடிகள் மாதோ.

செப்படி வித்தைக் காரச் சிவசிதம் பரந்தான் சென்னல்
ஒப்படி யாகு முன்னே உயர்ந்ததோர் வரியைப் போட்டான்
அப்படி யாகா தென்ருல் அவனம்மை அடித்துக் கொல்வான்
எப்படிக் குடுத்தா ளாவோ மெனச்சொல்லி யிரங்க லுற்ருர்.

## தரு

எப்படிப் பிழைக்கப் போருே மிந்தத் தெண்டத்துக்கு
எப்படிப் பிழைக்கப் போருேம்.

எப்படிப் பிழைக்கப் போருேம் எமசபை வாணர்நமக்
கிப்படி விதித்தா ராகில் இன்னன செய்வோம் நாமெல்லோரும்
...இடுமாடுவித்தால் காணுமோ எங்களுக்கிந்த
அவதிகள் வந்திட வேணுமோ.

பீடழிந்து மனம் நாடுமோ பாவி சீமையில்
இப்படி செங்கே...கோணுமோ.

ஓடிப்போய்ப் பிழைத்திடாமல் ஊரைச்சத மென்றிருந்து
தேடிக்கொண்டபலன் போதும் சிவசிவா வரிக்கொடுத்து.
வந்தசேவுகண் கொடூரம் பணங்கு டென்று
வாதிப்பானினியென் சாரம் - இந்தவகையா லென்னேரம்
அள்ளிக் கொடுக்க யிருக்குறே ... ...வீட்டிற் சிடாரம்
சிந்தை தடுமா றில்லே சிக்கிய கலேபொலிவன்
தொந்தரைக்கு ளகப்பட்டுத் தோதகத்துக் காளாகிறேம்.

நெஞ்சிலே உயிர் துடிக்குதே பாழ்த்த வரியை
நினைந்திடிற் பயம் பிடிக்குதே
என்செய்வோம் மார்பிலிடிக்குதே - தெய்வ...
அவன் எண்ணத்தின்படி முடிக்குதே.

பஞ்சை போலவே சோற்றைப் பார்க்களவுஞ் சேவகனைக்
கெஞ்சியும் காரஞ் ... சொல்லக் கிடைத்து -
விவ்வருஷத்துக்கு.

### விருத்தம்

கெடுமதிகண் தோணுமல் கெடுத்தனர் மன்னர்சீமைக்
குடியும்நாட் டாருஞ்செய்த கொடுமைக்கிங் கினிநம்மாற்செய்
திடுவதென் விடியுமட்டும் எலியழுததனுற் பூனை
விடுவதோ குடுத்துத்தீர வேணுமென் றுரைத்திட்டாரே.

### வசனம்

இப்படிப் பலவிதங்களை எண்ணிக் கொண்டு குடிகளெல்லாந் துயரப் பட்டுக் கொண்டு இருக்கிற வேளையிலே வந்த வார்ச் சிப்பாய்கள் சொல்வது.

### விருத்தம்

குடித்தனம் செய்வோர் தம்மைக் குனியவைத் தொருகால் மேல்வைத்
தடித்திட நே...கல் யமைத்திட விழுத்திட் டாவித்
துடித்திடக் கிட்டிக் கட்டச் சுபையிலுத் தார மந்தப்
படிக்கினி செய்வேன் கண்டீர் பணத்துக் குன் ... ...வீரே.

### தரு

மடிபிடித் திழுத்தொத்தைக் காலிலே வைத்துப் பெண்
கல்லையும் நெத்தி மேலிலே எந்தப்
படியும் யிண்ணெ...உங்கள் கையில்
பாதிப்பணம் வாங்கி அனுப்புவேன்
குடிகளே அரைவாசி குடுக்கவும் வகையுண்டோ இந்த
அனியாயவ...யுண்டோ வாங்கி வாவா
அனுப்பிக்கொண் டிருங்காணு மேதுக்குவலுவந்தஞ்
செய்யுறீர் நாயக்கரே.

கோட்டைக் கிழித்து...மறிக்குறேன்
கள்ளுக் குடித்தவர் போலினி வெறிக்குறேன்
உங்கள் நாட்டன பாட்டி தேடும் பணமெல்லாம்
அழைப்பி...பாருமென திருணியைக் குடிகளே
வீட்டில் பேச்சைப் பாத்தால் கல்லேயேதுணி
வெள்ளைப் பிலுக்கலால் வேறில்லே யெனல்லாம்
பூட்ட...ணெங்கள் குடித்தினம் ஒருக்காலே
போலக் காணுமலைக் காதீ ஞயக்கரே.

புளியமிலாரினி வெட்டுவேன் தீயில்
போட்டு வெ...நைய்யக் கொட்டுவேன் வெகு
துளிதுளியாகச் செங்குருதி பெருகச் செய்வேன்
சுருக்கிலே பணங்கட்டுங் குடிகளே—நாங்கள்...
தென்ன சாலமோ பணம் நாலு கடிகளதிகாலமே
கடன் வாங்கப் போயிருக்கிற தறிவீரே
யின்னேரம்வருஞ் சத்தே பொறுங்காணு...
வரமட்டுஞ் சாப்பிட விடுவேனே.
வாங்கா விட்டால் நானும் விடுவனே எங்கள்
துரைமட்டும் போயுங்கள் பேரிலேனிமைசொல்லிச்
சொல்லிக்குப் ... குடிகளே
ஒருகாலே சபதங்கள் கூறுநீர் எங்கள்
உடம்புத் தோலேயெல்லாம் பூறுநீர் இந்த
அரிக்கிதை யெதுக்குங் கரைநாழிகையில்
முடிப்பாகச் செய்யுருேம் பொறும் நாயக்கரே.

இரட்டைத் தொக்கைத் தோளில் வைக்குறேன்
சவுக்கெடுத்துங்களை யடித்து நொறுக்குறேன் இந்தப்
பிரட்டுவார்த்தை யிங்கே நடவாது பணத்துக்குப்
போவழிதனைச் சொல்லுங் குடிகளே தினத்தினம்
அடிமப் படத்தகுமோ படுதெண்டம்
பிடித்த பணம் நிற்குமோ எங்கள்
மனந்தா னெரிவது போலெங்களை வதைப்பவர்
மனையிம் யெரியுங் காணும் நாயக்கரே

மரியாதையாய் வைத்தால்ப்பேச் சேயோ
ரொக்கம் வாங்கந் தனிலும் யிதுவீசையோ இந்த
பரியாச வார்த்தையை நிறுத்தி யிண்ணைபிற்

கெடுப் பணத்துக்கு வகை சொல்லுங் குடிகளே
வெய்யிலில் விட்டுக் கிட்டிக் கட்டிக் கோயின்னடி
வேண்ணு மென்றுல் நாலுதட்டு தட்டிக்கோ எங்கள்
கையிலுள்ளதெல்லாங் குடுத்தாச்சுயினி அரைக்காசுக்கு
வகையில்லை நாயக்கரே.

## விருத்தம்

கண்டுமுத லானபடி கொடுத்தோ மத்தும்
கடன்வாங்கிச் சிறிதுபணங் கட்டினோம் பின்
குன்றை வித்துச் சிறிது ரொக்கங் குடுத்தோ மின்னம்
குடுகுடென்றுல் எங்கிருந்து குடுக்கப் போரூம்
மண்டலத்துள் ளோர்கள் செய்யயாப் பயிரை நாங்கள்
மாத்திரந் தானே செய்தோம் வல்லமையாய் நீர்
சண்டையிட்டே அடியாதீர் சுபைய தார்முன்
தான்கொடுபோய் விடுமெனவுஞ் சாற்றினரே.

## *வசனம்*

இன்னம் வசனம் குடிகள் சொல்லும் போதில் என்னால் ஆகாத கவை தனக்கே உம்மை மன்னவன்முன் கொண்டுபோய் விட்டே ரொக்கம் வாங்குவதென்றே யுரைத்து மழுப்போலச் சீறி பொன்னை யெல்லாம் அரைநிமிஷத் துங்கள் கையில் புகழ்பெற வாங்காவிட்டால் புலையனென்று கன்னமதில் வீசைதனை முறுக்கிப் பல்லைக் கடித் தெழுந்து துடித்திடுப்புக் கட்டுவானே.

## *தரு*

வாரும் நீரிந்தக் கோட்டில் வெய்யில் மறியலாக நில்லும்
பாருங் கணக்கைத் தீரும் எனக்குப் பணத்துக்கு வகை சொல்லும்
நீரெழுந்தீருங் காணிந்த கல்லை நெற்றிமேல் வைத்துக்கொள்ளு
பேர்வழிப்பணம் முடிப்புக் கட்டிய பின்னர் நிலத்தில் தள்ளும்
தம்பி நீ கிட்டவாடா உன்கையைத் தாடா
நான் கிட்டிகட்ட வம்பிலே அடிபடுமுன்னே பணம் வாங்கிவா
பொட்ட பொட்ட குனிய குத்துப்படுமுன்
வளையைக் கொடியை மாட்டிக் கொடாயினியடா
மரியாதை போயிடும் எனக்குள்ள பணந்தாடா.

### விருத்தம்

ஏதுக்கு நாயக்கரேநீர் யித்தனைக் கோபமாகி
வாதிக்கத் துணிந்தீர் யாங்கள் வஞ்சகஞ் செய்வதில்லை
வீதிக்கு ளிலங்கு கின்ற வீடுமாத் திரம்ஒன்ருழ்த்திச்
சோதித்துப் பார்க்கி லெங்கள் சொல்லுமக் குண்மை யாமே.

### வசனம்

இப்படிக் குடிகள் சொல்லும் போதில் வார்ச்சிப்பாய்கள் செய்யுற வயனம்

### விருத்தம்

வாரும்நீர் தாப்புத்தாரே வகையில்லைப் பணத்துக் கென்றே
ஊரினிற் குடிக ளெல்லாம் ஓதிய வார்த்தை யேது
பேர்வழி மீது டாப்பு பிறப்புத்துக் கணக்குண் டாக்கி
காரிய மதிலுண் டுருக் கணக்கரை அழைப்பிப் பீரே.

### வசனம்

அகோ வாருங்கோள் தாப்புத்தார்களே குடிகளெல்லவரும் பணமேது காசேது யென்று சொல்லுகிறதென்ன மொத்தத்திலே பணமிருந்தால் சுருக்கிலே செல்லமாட்டாது ஊருக் கணக்கப் பிள்ளையை அழைத்துப் போ. வழியிலே நிலுவை டாப்பு வாங்கித்தாரும். அரை நாழிகையிலே பணம் வாங்கிப் போடுகிறேன் என்று வார்க் காரர்கள் சொல்ல அதற்கு மறு உத்தாரம் தாப்புத்தாரர்கள் சொல்வது. அப்படியே கணக்கப் பிள்ளையை அழைப்பித்து நிலுவைக் கணக்கு வாங்கித் தருகிறேன் சிப்பாய் மார்களே.

### விருத்தம்

பக்கலில் லாருந் தோட்டிப் பயல்களிங் கில்லையா வென்ன
நிக்குறே னடியே னையா நீயும் போய்க் கணக்கர் தம்மை
இக்கணத் தழைத்து வாவென் றியம்பவும் அவன்சென் றேத
கைக்குள்ளோ ரேடுங் கொண்டு கணக்கருந் தோணி ளுரே.

## தரு (தெந்தின)

அய்யுறவாய் நடந்தே நம்மை அழைக்குற மார்க்க மீதே தெனவே
கைவளை தனையெடுத்து ஊருக் கணக்கப் பிள்ளையுந் தோணினரே

வளமுடனெழுத்தாணிக் கூட்டுமழதனிலே
நித்தப்படிசொருகி களத்நடைக் குறிப்பெழுதி
ஊருக்கணக்கப் பிள்ளையார் தோன்றினரே.

ரொக்கக் குறிப்பெடுத்தே வரிக் குனூதனக் கணக்குச்
சுருணைகளுங் கக்கத்தினி லெடுத்து ஊருக்
கணக்கப்பிள்ளைமார் வந்து தோன்றினரே. (தெந்தினம்)

## வசனம்

அகோ வாருமையா யாத்தாப்புத்தார்களே எங்களை அழைத்த காரிய மேது சொல்வீர்.

## விருத்தம்

வாருங்கோள் கணக்கரே நீவிரிக் கணக்கதனையுணிப்
பாருங்கோள் செல்லுப் போக பாக்கியின் னதுதா னென்று
தீருங்கோள் பேய்நாட் டாலோர் சீட்டினி லெழுதி யிங்கே
தாருங்கோ ளென்றே ஆருத் தாப்புத் தாருஞ்சொல் வாரே.

## விருத்தம்

கணக்கது கொண்டு வந்தோம் காரியக் கர்த்தனே யென்
நிணக்கமா யுரைக்கும் போதில் யெந்தன்முன் சொல்லி யென்ன
பணக்கெடு யெடுத்து வந்த பாரிய சிப்பாய் மார்க்கு
வணக்மாய் நிலுவை டாப்பை வாசித்துக் காட்டு மென்றார்.

## வசனம்

அகோ வாருமையா தாப்புத்தார்களே வரி நிலுவைக் கணக்குப் பேர் வழியிலே விதிச்சு யிண்ணையிற் கெடுவுக்குப் பணஞ் செல்லத் தக்க தாகக் கொண்டு வந்தோ மென்று கணக்கப்பிள்ளைமார் சொல்ல அதுக்கு மறு உத்தாரம் மணியக்காரர் சொல்லுவது பணந்தண்ட வந்த சிப்பாய் மார்கள் முன்னே கொண்டுபோய் வாசித்துக் காண்பியும் கணக்கப்பிள்ளை மார்களே; அப்படியே வாசித்துக் காட்டுகிறேனையா.

விருத்தம்

ஒருகுடிமேற் பத்துப்பொன் ஒருத்தன்மேற் பதினெட்டுப்பொன்
இருபத்தோர் குடியின்மேற்...றபொன் னெழுபதுந்தான்
அரு இருப்பவர் மேல் அன்பத்தாறுபொன் னிதனை யெல்லாஞ்
சரியற வாங்குமென்றே...கணக்கர் தாமே.

வசனம்

இப்படிக் கணக்கு வாசித்த பொழுதில் சிப்பாய்கள் சொல்லுவது

விருத்தம்

எங்க...பணமேயில்லை என்றிடுங் குடிகளேகேள்
உங்களூர்க் கணக்கன் ருனும் உரைத்தசொற் படியே ரொக்கம்
செங்க... ... யு முன்னே செலுத்திடா விட்டா லுங்கள்
அங்கமேல்குறடா வாலே அடிக்கிரேும் அடிக்கி ரேுமே.

கவி

பத்...டிக்கு மறியல் ஒன்பது யேர்கண்ணுந்தாள்
எட்டெற்கு நெற்றிமேல் கல்யேழற்கு நெரிக்குங்குட்டி
அறுவணைக்கு...க் குனியவைத்தஞ் செறகுக் குறடா
ணுவணைக்கு ஒத்தைச்சவுக்கு மூவனைக்குதை யிரனைக்கு
விதமில்லையே.

வசனம்

இப்படியாக வந்த சிப்பாய்கள் அருக்கிதை பண்ணும் போதிற் குடிகள் சொல்வது.

தரு

மெள்ளக் கட்டுங்காணும் சத்தே கிட்டியை
மெள்ளக் கட்டுங் காணும்.

மெள்ளக் கட்டுங்காணும் விரலைத் தெறிக்கு தென்ன
கொள்ளை வாரிக் கொண்டோம் - கூசா ... ...

உனக்குப் புண்ணியஞ் சொன்னபடி நடந்து வருவோம்
ரோசு சொச்ச முள்ளதுங்கைமேற் தரிவோம்.

வெகுசின்னத் தினமாய் நடுத் தெருவினிற்
மறியல்வைத் தென்னத்துக் கடிக்குறீர்
யிதுக் கனகத்து மில்லையோ.

வாள்பிடித்தவன் கையில் வாணல் அந்த
மரியாதை இல்லாமல் போனல் யினிக்
கூப்பிட்டென்ன சாரங்குலே பாதகா னேத்துச்
சாப்பிட்டதாகையால் தலேகிறு கிறுக்குது.

சிவரிகுந்தல்லவோ சித்தாஞ் செய்யத்
துணியலா மிதுவென்ன குத்திரம் இந்த
அவனாய முலகத்துக் கடுக்குமோ சிவசிவாளயே
வாரற் பொறுக்கக் கூடும் யிசிக்குது நரம்பெல்லாம்.

(மெள்ள)

## வசனம்

இந்தப் பிரகாரமாய்க் குடிகளே அவதிப்படுத்தும்போது கிராமத்து மணியக் காரர்கள் செய்யும் நடத்தையைச் சொல்லுவேன் என்றவாறு.

## விருத்தம்

வார்க்கார ரடித்தபொழு தங்கங்குள்ள
மணியக்காரர்கள் குடிகள்மேல் மானமாகி
யேற்காது கிட்டிதனே நெகிழ்த்துவீர் பொன்
இப்பவரும் மின்னவரும் மென்றே வந்தங்
கூர்க்காகவிரதுகி மனுச் சொல்வார் கீழதிக
குறுந்தில்லே விடங்கனெனு மூரை மூன்பின்
பார்க்காமல் ஒருமணியச் சாமி நாதன்
பணம்வாங்கும் நடத்தைதனேப் பகருவேனே.

ஊர்மணியக் காரரெல்லாஞ் செய்யுந் தீய்மை
யொருமடங்கு தில்லேவிடங் கனுக்கு வாய்த்த
பார்பத்தியக் காரனெனுஞ் சாமிநாதப் பாவி
படுத்திய கொடுமை பகரப் போகுமோ
சோரமொடு கட்டிவரச் சொன்னல் வெட்டிக்
கொண்டுவரத் துணிந்த நெஞ்சன் குலேக்கஞ் சாத
சூரன்வைத்த மணியமெல்லாம் ஒருபாக் காகும்
சூதுவித்தைக் கிவனுமொரு பாக்குத் தானே.

தண்டறசே வுகனிறங்கி யிருந்திட் டாலுஞ்
சகியாமல் அவனையிந்தச் சாமி நாதன்
கிண்டிவிட்டுக் குடிகளை வெயிலிலே வைத்துக்
கிட்டிகட்டி அடித்துத்தோல் கிழித்தி டாமல்
அண்டையில்வைத் திருந்ததனுற் பணந்தா னுமோ
அடித்த நாழிகையில் முடிப்பாகு மாறு
கண்டிதஞ்செய நானும் நல்லவன்போல் வந்துன்
கால்பிடித்து மனுச்சொல்வேன் கடைந்தி டாதே.

என்று ரகசியமாகச் சாமி நாதன்
இரவுபகல் சேவுகனுக் குபதே சித்தே
ஒன்றுமறி யாதவன்போல் இருப்பான் அண்டைக்
குள்ளபணம் கடன்வாங்கிக் கொடுத்திட்டாலும்
நன்றெனவே மகிழ்ச்சி பெருன் முன்னென்று நாள்முடிப்பு
நிலுவைநிற்குத் தணைவாங்கி யெல்லாம்
யின்றிவரைச் சாப்பிடவொட் டாமல் கைதொட்
டிழுத்துவிட்டுப் பணம்வாங்கென் றியம்பு வானே.

கரங்களிலே கிட்டிகட்டி அடிக்கும் போதிற்
கண்ணீர்பாய்ந் திடத்தலைமேல் கையை வைத்துப்
பெருங்குரலிட் டூர்க்குடிகள் அழவே கண்டப்
பிரேதமா கிலுமசைந்து பேசும்பட்ட
மரங்களும்பால் வடிந்திளகி யுருகும் பால
மலையும் நெகிழ்ந் துளமுருகு மனதிற் சற்றும்
இரங்கறியாக் கரிமுஞ்சிச் சாமிநாத னென்பான்
ஏமாந்திதைப் பராக் கிருப்பன் ருனே.

அரைவாசி வெந்தகரிக் கட்டை போலும்
அம்மாவா சைக்கருக்க லிருளைப் போலும்
தரைமீதில் முகம்படைத்தச் சாமி நாதன்
தருகிரேங் கிட்டிதன்னைத் தளர்த்தச் சொல்லென்
றுரைபேசி னுலுமதற் கொன்றுஞ் சொல்லான்
ஒருத்தரைக்கண் ணுல்பாரான் உளமுஞ் சத்தும்
கரையாதா னின்னபடி யென்றே சேவு
கனைப்பார்த்துக் கண்சாடை காட்டுவானே.

## அகவல்

சீமையில் விளைந்த நெல்லை யெல்லாம்
ஈமிஷம் பார்த்தங் கறுப்புக ளறுத்து
ஒப்படிப் பண்ணி ஒருகருக் காய்ப்பதர்
அப்புறம் போகா ததனுடன் கலந்து
மரக்கால் தலைக்கு வாரியி டாமல்
துரைக்காறு பாருய்த் தூக்கி யெறிந்து
பட்டடை யாக்கிப் பயிரிடுங் குடிமேல்
விட்டதைப் பணமாய் வித்துத்தா வென்று
கண்டிதஞ் செய்யுங் காலையிற் குடிகளத்
தெண்ட மிறுத்துச் சேதியைக் கேளீர்
சோடுகங் காணச் சோத்திலோ ராறு
கூடுகங் காணக் குட்டையோர் பதக்கு
மணியக் காரர்மேன் மனிதர்கள் நிசந்தா
அணிபெறு... சில்லா அவாலச்சம் பிறுதிப்
பலப்பல பேர்க்குப் பாக்குவெத் திலைக்குக்
கலக்கல நெல்லோர் களத்தில்வீண் சிலவு
துக்ககா ரருக்குச் சோறுருபா...
பணம்பெற வகைபால் நெய்தயிர் வார்த்துக்
கொடுத்தும் அணந்தாபெரி பெரியோர் ஆண்டிவசிகள் வந்து
கேட்டவர்க்கு வழங்கிய பொறுப்பும்
கூத்தாடிகளுக்கும் கோள்சொல்லு கட்கும்
ஏய்த்தோர் தமக்கும் யீய்ந்த பொறுப்பும்
அறுப்புப் போரடி ஆள்கூலி மாத்திரம்
பொறுப்பதாய் வாங்கிப் போட்டதும் போக
விளைந்திடு நெல்லை விலைகார ருக்கு
அளந்திட னூத்துக் கைங்கலம் பாடு
தூத்துப் பாட்டிற் துகையோர் ஐங்கலம்
பேத்துப் போட பிறகொரு முக்கலம்
இறைந்தும் தவழ்ந்தும் இப்படிப் பாடாய்க்
குறைந்தநெல் லெல்லாம் குடிகள்மேல் கூட்டி
கணக்காய்ப் பணத்தைக் கட்டுமென் றடிக்கயிக்
கணமாய்க் குடிகளி யாவரும் வாடி
நாடறிந் திடவே நாலரை விலைக்குப்
பாடி யளந்து பணமது செலுத்த

மூன்றரை விலைக்கு முறித்துக் கட்டி
தேண்டிய கணக்கு மதுகையுண் டாக்கிப்
பணத்துக்குக் குறுணி படுதெண்டங் கூட்டிக்
கணக்குள்ள பணத்தைக் கட்டுமென் றடிக்க
அப்படி தானே அவரவர் கடனுடன்
மெய்ப்படி வாங்கி வீதமாய்ச் செலுத்தும்
போதினிற் செண்ண பொன்னினுக் கெல்லாம்
பாதக மாகப் பத்துக்கு ரெண்டு
செண்ண பணத்தில் சிலவு கழித்து
நிண்டதைக் குடென்று நீங்கள் முன்காருக்
குடிவாரம் பத்திக் கொண்டத்துக் குள்ள
படியே கணக்காய்ப் பணத்தைக் குடென்று
மறித்தே யடிக்க மாடுகண் விலையாய்க்
குறித்தே வித்துக் கொடுத்திடுங் குடிகள்
இப்படித் தெண்டம் இறுத்ததுங் கண்டோம்
எள்பிர மாணம் இரக்கமில் லாமல்
என்ன கொடுத்து இளைத்துவிட் டார்கள்
இன்னங் குத்தகைக் கேரு லேக்கமாய்
நஷ்டி வருகுது நாமோ கொடுப்போம்
அட்டியில் லாமல் அடித்துவாங் கென்றே
வேஷப்புலி போலே விழிகள் சிவந்து
செப்பிய சுபையதார் சீறிய போதில்
ஊர்குடி யெல்லாம் ஒருமித்துக் கூட்டி
வார்காரர் செய்யும் வருத்தம துரைப்பேன்
கிட்டி கட்டியும் கெடுப்படிப் பணத்தைக்
கட்டுமென் றதட்டிக் கன்னத்தி லடித்தும்
உதித்தசெங் கதிரோன் உச்சிநே ரத்தில்
கொதித்திடும் மணலிற் கோட்டில் மறித்தும்
உறிக்கி முழித்தும் ஒத்தைக்கால் மேலே
நிறுத்தியுங் கல்லை நெத்திமேல் வைத்தும்
மூக்கைக் கடித்தும் முதுகில்கல் லேத்தியும்
தொக்கைத் தோளில் சுமந்திட வைத்தும்
பொன்கட்டச் சொல்லிப் புகன்ரேடி வந்து
பின்கட் டாகப் பிடித்துக் கட்டியும்
குனியவைத் தாங்கிக் குத்தியண் ணந்தாள்
தனித்தனி யாகத் தவித்திடப் போட்டு

வதைத்தும் புளிய மலாரது வெட்டிச்
சதைக்குங் குறடாச் சாட்டியி னலே
அடித்துங் குடிகள் அலறிடத் தொக்கால்
இடித்துங் கூகூ வென்றிடச் சவுக்கால்
வீசிய போது விருதுட னெதிர்த்துப்
பேசிய பேரைப் பிடரியிற் குத்தியும்
மரங்களை நட்டு வாரைபோட் டிறுக்கிக்
கரங்களிற் கயிறு கட்டித் தூக்கியும்
வெடிபெறு தொக்கின் விசையைக் கழத்திக்
கடுகவே ரெண்டு காதி விடுக்கியும்
ஆழக் குழியில் அக்கிள ளவாய்த்
தாழப் புதைத்துத் தண்ணீர் வார்த்தும்
கழுத்தினி லூலேக் கட்டித் தூக்கியும்
இழுத்துப் பருங்கலே விரண்டுகைக் களித்தும்
நசுங்கியே யிணகோலப் பெருலிருடலும்
நசுங்கிடத் தொக்கை நாட்டிக் கவிழ்த்து
மாடு விடாமல் மறித்தும் கதவுகள்
வீடுதப்பாமல் வீதிச்சுழுத் திரிச்சுத்
தண்ணீ ரெடாமல் தடுத்தாணை யிட்டும்
கண்ணீர் பெருகக் கண்டிதஞ் செய்தும்
இரவும் பகலும் இருகண்ணித் திரைகள்
வரவுமொட் டாமல் மறியலில் வைத்து
வாராக் குடிகள் மனைவியை யிழுத்துத்
தாராள மாகத் தலையில்மண் வைத்தும்
அன்னந் தண்ணீ ரருந்தவொட் டாமல்
இன்னந் தாமத மேதென் றடித்துப்
பாரபத் திரமாய்ப் பணமது வாங்கி
வரப்போ னவர்கள் வரச்சத்து நேரம்
சென்றுலவ் வீட்டுச் செனங்களை யெல்லாம்
ஒன்றுய்ச் சேர்த்திட் டெல்லால மிட்டற
வீட்டி லடைத்து மிளகுகா யதனைப்
போட்டுப் புகைப்பேன் பொருளைக் குடென்று
இப்படி யாக இடுக்கண் ணியற்றக்
கைப்பொருள் தோத்துக் கலங்கிக் குடிகள்
என்செய்வோம் சிவனே யெங்களுக் கினிநீ
தஞ்சமென் றெண்ணித் தான்புலம் பினரே.

## விருத்தம்

வாச்சுதென்பார் அவதிநமக் கேதோ தம்பி
பிடிப்பன போர் நாளுக்குநாள் வருத்த மென்மேல்
வாச்சுதென்பார் என்னகுடுத் தினந்தா னென்பார்
அனியாய மோவென்பார் அடிபட்டங்
காச்சுதென்பார் கடனுக்கா ளாகினோ மென்று
கத்திடுவா ரினிநமது கனங்க ளெல்லாம்
போச்சுதென்பார் சிவனேசங் கரனே யென்று
புலம்புவா ரென்னசெய்யப் போறோ மென்பார்.

## குடிகள் புலம்பல் தரு

குத்தகை நஷ்டி குடென்று மிடுக்கிறான் தெய்வமே—அது
கொஞ்ச மென்றாலுங் குடுத்துத் தொலைப்போமே தெய்வமே.
எத்தனைப் பொன்னென்று நித்தமுங் கட்டுவோம் தெய்வமே—நாங்கள்
இந்தப் பொன்னிவ்வள வென்றுதுகையுண்டோ தெய்வமே.
கிட்டி இருகையிற் கட்டி மிதிக்கிறான் தெய்வமே—சத்துங்
கேள்வியு மில்லையே ஆவி பதைக்குதே தெய்வமே.
அப்படி யிதேதென் றதட்டியடிக்குறான் தெய்வமே—இந்த
அனியாயத் தெண்ட மடுக்குமோ சீமையில் தெய்வமே.
ஊருக்கிருவர்கச் சேரிக்குட்சிக்கிக் கொண்டாரே—தப்பி
யோடவென்றாலும் ஒருவழி காணோமே தெய்வமே
பாருக்கு ளிப்படி வாரிக்கொடுத்தவ ருண்டோ—என்ன
பாவத்தி னாலிந்த ஆபத்துக் குள்ளானோம் தெய்வமே.
முன்னுக்குப் பயிர்செய்ய முச்சுறங்காய் விரைகாணோம்—இப்ப
முடிப்புக்கு வகைசொல்லென் றிடுப்புக்குளிடிக்குறான் தெய்வமே.
கன்னத்திற் சாடுவேன் பொன்னைக்கட் டென்கிறான்தெய்வமே - என்ன
கண்டித்தாலு மரைக் காசுக்கு வகையுண்டோ தெய்வமே.
ஏதுக்கிவன் கையில் எங்களை ஒப்பித்தாய் தெய்வமே - இனி
என்ன செய்வோமரைக் காசுக்கு வகையில்லை தெய்வமே.
ஆதிக்க மெல்லாம்போய் வாதைக் கிடமாச்சே தெய்வமே - நாங்கள்
அறியாமற் பயிரிட் டவதிக்கா ளாகினோம் தெய்வமே.

துற்சனன் தன்னைத் துரையென்று வைத்தாயே தெய்வமே -இந்தத்
தோஷமுன் மீதிற் சுமத்தலையல்லவோ தெய்வமே.

வரிசிகத்தில் நாங்கள் மாத்திரமோ விரையெடுத்தோம் - குடி
வாரமொரு படி வாங்காமலே வித்துக் கொடுத்தோம் - இப்பத்
தெருவிலே நின்று தியங்கி மயங்குரேம் தெய்வமே - பயிர்
செய்த தல்லாலொரு சின்னநெல் லறியோமே தெய்வமே.

ஒருவர் முகந்தன்னை ஒருவர்பார்த் தேங்குரேந் தெய்வமே -
இனியுன்பாதமல்லால் ஒருதுணை காண்கிலோம் ......

...ங்கியேகுடி கெடுக்க வேணுமென் றடியுமெடுத்தான்
திருந்திய கலப்பை முனையால் நிலத்தைக் கீறித் தண்ணீர்
தேக்கிப்பயிர் ... தனுமேயிப்ப யிருந் திடமெல்லாம்
நிலத்தைக் கிண்டி விழிநீர்தனை யிறைத்த படியாகினேமே.

நல்லதிரு நீறணிந்து . . . மைகள் பேசித்திரு நாமமிட்ட
நெத்திமேலே ஒருகல்லையுஞ் சுமந்து கொண்டண்ணுந்த
படி நிற்கச் சொல்லி ... னே சாட்டியாலே
ஆறிலொரு பங்கு கொண்டுசோழராசா நீதியுடன் ஆளயில்லையோ
இந்தப் பாருக்குள் ... லோருபங்குகுடி வாரம்
நெல் கொடுக்க மனம் நோகுதே சுபையதாருக்கு
காருக்குப் பத்திய குடி வாரத்துக்குள்ள பணத்தை
...யே மறிக்குருன் மூன்று நேரத்துக் கொருபொழுது
சாப்பிடவொட்டாமல் கோட்டில் நிற்கச் சொல்லியே
மறிக்குருன்... நித்தம் பத்துச்
சேவுகர் வந்தாலும் அசையாமல் நிர்வாகம் செய்வமே—இப்ப
இன்னுளில் ஒருநொண்டிச் சேவுகன் வந்தாலுந்
திகிவிட்டொளிக்- கலாச்சு தெய்வமே.

### விருத்தம்

எம்சபை வாணர்வளர் சிதம்பரஞ் சீமையிற் பயிர்...ர் தம்மை
பாரமராகிய பொல்லாவார்கார ரிழுதவதிப் படுத்தும் போது
தாமரைநீர் பொறத்தும்பி யினீந்து மாலடிகள்...தெந்தச் சீமையிலாகிலும்
ஓடிப்பிழைத்திடுவோம் வாருமெனச் செப்பிசிலர் சொல்வாரே.

### *கவி*

பெருந்துயருழத்தீத்...பலக்குடிக ளெல்லாம்
அரும்பொரு ளிழந்தங்குத்தம் அவதியைச் சொன்னேனிப்பால்

வருந்தியே கச்சேரிக்கு வார்காரர் வசமதாய்வைத்
திருந்திடுங் குடிக்குத் துன்ப மியத்திய தியம்பலுத்தேன்.

## வசனம்

இப்படியெல்லாங் த்திலுள்ள குடிகள்அவதிப்பட்டுப் புலம்பி யினி மேல் கச்சேரியிலே வார்காரர்வசமாய் மறியலிருந்த குடிகள்...யைச் சொல்லத் துடங்கினே னென்றவாறு.

## விருத்தம்

சிறைதனில்வைத் திருந்ததுபோல் குடி...பேர்களைக்கச் சேரிக்குள்ளே
அறைதனில்விட் டடைத்துநித்தம் ஒருவேளை யமுதருந்த விட்டும,.ரைச்
சிறிதுகால சந்திக்கே காமல்மறித்துச் செய்யுந்
துறைகளெல்லா மிப்படியே நித்தமுமன் னீதிசெய்ய...ங்கினனே

இந்தவகை யாய்மறியல் னினியிருக்கும் குடிகள்யா வரையும் பார்த்து
வந்துதோ முடிப்பென்பான் வந்து...லடிமாம்பு வார்மற் சத்தே
பிந்தினல் அவ்வூருக் குடியாரென் றருகழைத்துப் பிடித்துக் கட்டி
உந்தனூர் பணம்வ...மதமேதென்றடித்துத் தோல் உரிப்பிப்பானே.

வரிகொடுப்ப தல்லாமல் தினந்தினமோர் ஊர்ச்சிலவின் வயனங்கு ருசிக்கும்

கார்கொன்ற தங்களுக்குஞ் சம்பிறுதி அவாலுதார்க்குங்
கிரியிருக்குஞ் சேனக்கும் பணந்தண்டலச்சே. கிட்டிப் பேசிப்
பரிகரிக்கு வல்லவமகுங் கொடுப்பது பார்த்திடில் வரியில் பாதியாமே.

## வசனம்

இப்படியே கண்டிதம் பண்ணிப் பின்னையுஞ் சுபையதார் சொல்வது.

## கவி

என்னதான் அடித்திட்டாலும் இருகையை விரிப்ப...றி
பின்னையோர் காசுமீயான் பிலத்தநெஞ் சுள்ள கள்ளன்
தன்ரப்பயந்து வாரடா அடாயென் முன்னில்லாமல் தள்ளிப் போய்ப் பணத்தை வாங்கென்
றுன்னிவார்க் காரரோடும் உரைத்தனன் சுபையதாரே.

## வசனம்

சுபையதாரர் கோபிச்சுக் கொண்டு சொன்ன மாத்திரத்திலே வாரா விலே வைத்திருந்த குடிகளைச் சிப்பாய் மார்கள்...தள்ளிக் கடினம் படுத்துவது.

## தரு

கையைக் கிட்டி கட்ட நீட்டடா—உந்தன்
கழுத்திலண்ணுந்தாளை மாட்டடா
நைய்...யெல்லாம் விட்டோட்டடா—சூது
நடவாது முடிப்பிங்கே காட்டடா.
உளுக்காந்திருக்கிறவ ஞரடா—இன்னம்
...பணம் வல்லைப் பாரடா இளப்பமோ
சேர்ப்பந்து வாரடா அடாயென் பேரோ
செக்கும் தாரடா முடிப்பின்னம் வ...தென்ற
இந்த மோசத்துக் குன்னையடிப்பேனடா இனி
பிடித்தால் விடுவதில்லை நானடா—எந்தன்
பேரோ முரட...ப்பாட்டே காணடா அடடா
உன்னூர்ப்பண மெங்கடா இனி அடியும் உதையும்
உந்தன் பங்கடா—கிட்ட...சினத்திலிங்கடா—நானே
குணங்கெட்ட முசுபரா சிங்கடா.

## விருத்தம்

எமகிங்கிலியர் தம்மைப் போலும் எழுந்துயர்ந்து...
சிமையை நிகரற்ற புலிபோலும் சீறிச்சினத்து வார்காரர்
எமதுபணத்தைக் கொடுகொடென்றே யிருக்கும் போதிற்
குடிகளெல்லாந் தமதுதலை...தாமே நினைந்து தளர்வுற்றார்.

## தரு

பல்லைக்கடித்தோடி வந்து கல்லைத் தோளில் வைக்கவாரான் சிவனே—
இதைப்
பார்த்தாலு மெங்களுக்குத் தோத்துதே சிவனே

சொல்லுக்கிடமாக விந்த அல்லல்பட லாச்சுதய்யோ சிவனே — எங்கள்
துன்பத்தைக் கண்ணுர நீகண்டி...தாளுத்தேன்கொல் சிவனே.
பொல்லாத வேடன்கையில் எல்லாரையும் ஒப்பித்தாய் சிவனே
—இனிப்
போது மெங்களால் படத்தள்ளாது. .வேணும் சிவனே
நல்லோர் பெரியோரைச் சொல்லா தெல்லாஞ் சொல்லுருன் சிவனே
—இது
ஞாயமல்ல வென்று சொல்ல வாயுமில்லே எங்களுக்கு...
அர்த்த இராத்திரியில் தெருமத்தியில்விட் டடிக்குருன் சிவனே—
எங்களுக்
காறுதலேச் சொல்லியினி வேறுதுணே காண்கிரும் சிவனே—இந்த...
......கோலத்திலும் பட்டறியோமே சிவனே—இப்ப
எங்களுக்கிப் படிபடப் பங்கயன் விதிப்படியோ சிவனே.
வேதனேதுலேத்திட...... யாய்நீ இருந்தால் சிவனே — துயர்
மிஞ்சுதே உனக்கறுபத்தஞ்சான விளேயாட்டிதுவோ சிவனே.
ஏதுக்குநீ இப்படி தினஞ்சோ...ருப்பதுஞ் சிவனே—நாங்கள்
எல்லவரு மீடேற நல்லவரந் தரவேணுஞ் சிவனே.

## விருத்தம்

சிவனேயென்றூர்க் குடிகளூறும்டே...பள்ளியில்முன்
சென்ருேர் தங்கள் கவலேயெல்லாம் நபாசாயப்புக் குரைக்கும் போதிற்
காயிதமும் தாக்கிதையாய்கை...பின்னேச் சோப்புத்தாரிரண்டு பேரை
யனுப்புமளவினில் வந்ததனேக் கண்டே யிவனும்த...வாசித்திருந்த
லோசனேக்
கிடமாயெண்ணு வானே.

தெரியாலோசனேயும் பிறித்துப் பார்த்து சீக்கிரமாய் நராசாயப்ப...
பாரிகளோடு கார்க் கோணரெல்லாம் கையடை ஐயாயிரம் ரூபாயைக்
கட்டி
வீருடனே யனுப்பிவைத்தான் கேழ்விதானும் ... போதிற் குடிகள்
மீதிற்
சீறியந்தக் காகிதமோர் துரும்பாயெண்ணிச் சினந்திட்டாரனே
வோரும் தீகைத்திட்டாரே.

இலவதுகாத் ...... தன்னேப்போலும் எட்டிதனேக் காத்திருந்த
ஏழை போலும்

துலே ... ந்தனிற் தோன்றுங் கானல் தன்னைத் தோயமென ...
துருபமெய்தும்
கலேபோலும் நசையில்லா நாணல்தன்னைக் கரும்பெனவே விரும்பு
கின்ற களிறுபோலும்
பலநாளும் பள்ளிதன்னைப் பார்த்திருந்த பேர்களுடன் பலன்கள்
தானே.

என்ன செய்வோம் இத்தனைநாள் காத்ததெல்லாம் ...
விழற்கு நீரிறைத்ததாச் சென்றுன்னி யழுவார் விழுவார் எழுவார்
வேறேது
தவியென்பார் அவதிநமக்குற்ற தென்பார் சென் ... கவுழநிலங்கீறி
-னெஞ் சந்தியங்கிடுவார் யினிவருத்தஞ் செய்வாயென்பார்
-தன்னிலேதான் தெறிகொள்வராகித் தளர்ந்திடுகாலே ...சொல்லு
வாரே.
பயிர்செய் குடியானவர் மாத்திரந்தானே வரியிறுப்பார் பாவம்
நயமுடைய சீமையில் வாழ்ந்திருந்த பலபட்ட ... ... டாறும்
செயமுடனே தேடுகின்ற திரவிய மென்னுளில் முழுத்தெண்ட... நதிட
பயரவொடு கையினை ... யிட்டவ ... றமைந்தகாலே.

## வேறு

செக்காளன் வண்ணான் செட்டி சேணியன் வலங்கன் தோட்டி
கைக்கோளன் ஆண்டி ... ... ... ... கோமுட்டி
மெய்க்காவலாள் ஊர் நாவிதன் யிவர்தம்மைக் கூட்டி
முக்காலு மடித்தடித்து முடிப்பெங்கே கொடு ....

## வெண்பா

பட்டணத் திலுள்ள பலபட்டை யாரைத்
திட்டி வைது வார்காரர் சேரப்படுதால்
ரெட்டியப்பே ...... பதைத்தென் செய்வோ
மென்ரு றங்கி புலம்பு வாரே.

## வசனம்

இப்படி யெல்லாம் பல பட்டடையாரை அடி ... போது அவர்கள்
புலம்புவது.

தரு

என்ன செய்வேன் சபைநாதா யெங்களுக்குயிரே நீதான்
பின்னே வெறு...வைத்துசன்னதம் வந்தவர்போலே
தாண்டி வாருனெங்கள்மேலே.

அன்னேயும் பிதாவும்... பட்டணத்துச் செட்டிமாரால் வர்த்தகம் செய்வோரே—மட்டில்லாமல் வாழ்ந்தோம் நாமே. வரிகொடு... தில்லாமல் மெய்யிலடிப்பட்ட யிலக்கிட்டயண்ணுந்தாளுண்டாச்சே கேள்வியுமில்லாமல் ... னேயொருக்காலே சித்தெறும்புலே குறித்துப் பொருளே...கொள்ளேயா யிவர்க்கே தோத்தோனம்

பொருத்தா ராசே யாவுவார்
பொங்கினவர் மங்கி மாள் வராயிறு ...து

சின்னம்.

விருத்தம்

# பொருள் அகராதி

[எண் : பக்க எண்]


அகவல் 29, 58
அங்கமேல் குறடாவாலே அடிக்கிறோம் 55
அடிபிடி 42
அண்ணுந்தாள் 55,59.64
அண்ணுந்தாள் போடல் 35
அம்பார் (அம்பாரம்) 40
அமாவாசைக் கருக்கலிருள் 57
அரன் வாமத்தாள்(உமை) 27
அரைக் காசுக்கு வகையில்லே 52
அரைவாசி வெந்தகரிக்கட்டை 57
அல்லா 34
அல்லும் பகலும் 40
அவர்வில் வைத்தல் 34
அவரவர் குடித்தனம் அவரவர்க் கல்லோ தெரியும் 38
அவாலுதார் 42, 63
அறுப்புப்போரடி ஆள்கூலி 58
அறுப்பு விட்டுக் களமளந்து வருதல் 43
அறுப்பு விடுதல் 39-40
அறுபத்தஞ்சான விளையாட்டு 65
அன்னீத நாடகம் 27
அன்னீதி நாடகம் 27
அன்னேயும் பிதாவும் 67
அனந்தீசர் 31
அனியாயத் தெண்டம் 61
ஆண்டி 66
ஆயிரக்கால் மண்டபம் 29
ஆள்கூலி 40
ஆனந்தக் களிப்பு 41
இங்கிலீசுகாரர்கள் 31
இருட்டுக் களமளத்தல் குற்றம் 43
இருதுண்டமாக வெட்டக் கழுவில் வைத்தல் 41
இலவு காத்திருந்த கிளி 65
இனுதுகான் சாயபு 30
உடல் வாழுயிரெனஎவர்க்கு முதவி 30
உயிரளவிறுதி 42
உறவாடிக் கேட்டாலும் தண்டித்துக் கேட்டாலும் 38
ஊமைப் பேய் பித்தர்போல் 41
ஊர்க்கணக்கர் 35
ஊருக் கணக்கப் பிள்ளே 53,54
எங்கள் மனந்தா னெரிவது போலெங்களே வதைப்பவர் மனேயும் எரியும் 51
எமகிங்கிலியர் 64
எலி எறும்பு ஒரு நெல்லு மூக்கைத் தீண்டாமை 44
எலியமுத்தினுல் பூனே விடுவதோ 50
எள் பிரமாணம் இரக்க மில்லாமல் 59
ஐந்து சபை 29
ஒப்படி பண்ணல் 58
ஒய்யாரமாய் நடத்தல் 29
ஒருமுனிமகன்-உபமன்யு 29-30

ஓமென்று கையெழுத்
தூணும் 38
ஓரணேயோர் 49
கங்காணி கத்தி சமுதாடு
தடிக்கம்பிளி கேடயம்
எடுத்துப் போதல் 42
கங்காணித்தல் 42
கங்காணம் 42
கச்சேரி 34,36 61,63
கச்சை 48
கட்டியக்காரன் (3) 29
கட்டியக்காரன் வருகை 28
கட்டிவரச் சொன்னல்
வெட்டிக் கொண்டு வரத்
துணிந்த நெஞ்சன் 56
கடப்பை சுபா 30
கணக்கர் 35
கதிர்ப்பிட்சை 40
கந்தன் 27
கம்பிளி 42
கயிலே 30
கல்லுக்கரிக்காய் 43
கவில்ப்படி 30
கவி 45, 46, 62,63
களத்திலே வயலிலே கதிர் 42
களப்பிட்சை 40
களரி-நாடக அவை 29
கற்பகம் (கற்பக விநாயகர்) 27
கனக சபாபதி (இறைவன்) 28
கனகசபை 33,34
கனகசபை நாதன் 28
கனகசபை மகாராசன் (கானு
சாயபேந்திரன் மந்திரி-தந்திரி)32
கனகசபை மகாராசனின் நீதி
துரைத்தனம் 32
கனகசபைராசன் மிகுவரி
போடுதலே மறுத்தல் 34
காசி30
காப்பு27
காமயா (தாமயா) 31
காறுபார் 40
காறுபாறு 58
காறுபாறு செய்தல்34
கானுசாயபேத்திரன் 30
கானுசாயபு 33
கானுசாயபு
(மம்முதலி) 34
(கானுசாயபு சிவசிதம்பர
னுக்குச் சீமைக் குத்
தகை தருதல்) 34
கானுசாயபேந்திரன் 32
கிட்டி 61
கிட்டி கட்டல் 50,52,64
கிட்டி கட்டுதல் 35
கிட்டிபோடல் 46
கிட்டி போடுதல் 46
கிட்டியை மெள்ளக் கட்டும்55
கிடாரம் 49
குடிகளிடம் வரிப்ப பணம்
வசூலிப்பதற்காகச் செய்த
கொடுமைகள் 46
குடிகளின் இரங்கல்மொழி 49
குடிகளின் புலம்பல் 61,62
குடிகளும் நாட்டாரும் 45
குடிவாரம் 59,62
குத்தகை நஷ்டி 37,61
குத்தகையாய் வாங்கல் 33
குருட்டடியாய்க் கணக்கெழு
திக்கொடுத்தல் 35

குல்லா 29
குறடாச்சாட்டி 60
குறுணி நெல் பாடுவர
அளத்தல் 40
கெடுப்பணம் 52
கெடுமதிகண் தோணுமல்
கெடுத்தனர் 50
கேடயம் 42
கைக்கோளன் 66
கையடை (கையூட்டு) 62
கையெழுத்து (ஒப்பம்) 37.38
கொக்குக் கூட்டமொரு
ராசாளியைக் கண்டு குலை
நடுங்குவது 47
கொடிநிலை நிறுத்தல் 31
கொள்ளிடக் கரை 30
கோகன நாயகி 28
கோமுட்டி 66
சகலாத்து 29
சங்கரன் 61
சபைநடேசர் 29
சபைவாணர் 62
சம்பிறதி 34
சம்பிறுதி 58,63
சமுதாடு 42
சல்லடம் 48
சலாம் பண்ணுதல் 35
சவுக்கடி 42
சவுக்கு 60
சன்னதம் வந்தவர் 67
சாட்டி 62
சாமராயன் (மறையவர்
குலத்தான்) 31
சாமிநாதபாவி 56
சாமிநாதன் - மணியச்
சாமிநாதன், தில்லை
விடங்கன் 56,57
சிங்கவன்மன் 29
சிணத்துக்குச்சிணம்
சித்தம் பேதித்தல் 40
சிதம்பரங் கோட்டை 32
சிதம்ரஞ்சீமை 27,29,30,32,
33,62
சிதம்பரஞ்சீமை சிவசிதம்
பரனுக்கு அசங்கிதம் பெற
அளித்தல் 32
சிதம்பரஞ்சீமையும் மன்னூர்
சீமையும் 31
சிப்பாய்மார்கள் 47 53
சிவசிதம்பரம் குடிகளை
வதைத்தல் 23
சிதம்பரம் மறுபடி சுபைக்கு
வந்து அநீதி செய்தமை 32
சிவசிதம்பரம் 28
சிவசிதம்பரன் 27,28,29,32
33,34,36,49
சிவகங்கை 29
சிவன் 60,61
சிவனடியார் 30
சிவனே 64,64
சிறுபுத்திகள் 41
சின்னத்தனம் 56
சீட்டிலொப்பம் வாங்குதல் 36
சுபை 2,32.50
சுபைதார் 34,40 42,44 52,59,
62 63,64
சுபையதார் சொல் 63

சுபையதார் மணியக்கூட்டத்
தாருக்குப் புத்தி சொல்லுதல் 40
சுபையதாருக்கும் குடிகளுக்கும்
வாக்குவாதம் 37
சுறங்காய் நெல்(சிறக்கைநெல்)41
சூடுபட்ட பூனை சுத்துமோ
அடுப்பை 37
செக்கான் 66
செஞ்சொலிசைவாணர் 28
செட்டி 66
செந்தமிழ் 32
செம்பியன் 31
செம்பியன் போலும் செங்கோல்
செலுத்தி 31
சேணியன் 66
சேவுகர் 34
சோடுகட்டி அனுப்புதல் 41
சோடு சேர்ந்திருத்தல் 42
சோதினைக்காரன் 43,44
சோழராசா 62
தரப்புத்தார் (மணியக்காரர்) 39
தபாத்துக்காரர் (சோதினைக்
காரர்) 43,44
தரு 29.36,40 44,49,50,51,
52, 54, 55, 61, 64, 67
தாப்புத்தாரர் 48
தாணியம் ஒப்படிபண்ணுதல்
திருகணி 38
திருச்சிராப்பள்ளி 45, 46
திரிசூலம் 28
திருநாமம் 62
திருநீறு 62
தில்லும் பில்லும் 38
தில்லைக்கற்பகம் 27
தில்லைவனம் 30
தில்லைவடங்கள் 56
தீர்வை 30,33
துக்கக்காரர் 41,42
துகம் 41
துகம் பார்த்து 43
துங்கமறை வேணியர்
(இறைவன்) 28
துரைத்தனம்28.31,62
நூத்துப்பாடு 58
தூப்புந்தூருய் 48
தெண்டமிறுத்தல் 58
தெய்வத்தலமாம் சிதம்பரம்
பெருமை29.30
தெய்வம் தொழுதல் 45
தெய்வமே 61,62
தெய்வராயன்(நாட்டாண்மை)33
தோட்டி 60
தோட்டிப்பயல்கள் 53
தோரணம் 32
நபாசாயபு 65
நவாபு(கானு சாயபு) 45
நஷ்டி 6.37,59
நாட்டாண்மை33
நாட்டார் 45
நாட்டியத்தரு 28
நாணல்தன்னைக் கரும்பெனவே
விரும்புகின்ற களிறு 66
நாயக்கர் பாடிகள் 35
நாயக்கர் 42, 50
நாவிதன் 66
நிலுவை 57
நிலுவைக் கணக்கு 53
நிலுவைடாம்பு 54
நெய்யும் பரும்புஞ் சோறும் 41
பக்கிரிமார் 34
பட்டை 44
பட்டணத்துச் செட்டியார் 67
பட்டயம் 36

படுதண்டம் 51
படுதெண்டம் 59
படுதெண்டம் பிடித்தல் 32
பணத்திற்காகச் சேவுகர் செய்த கொடுந்தண்டங்கள் 52,53
பதஞ்சலி - வியாக்கிரபாதர் 29
பதருக்குள் கையைப் போட்டுப் பார்த்தல் 44
பயோததி (பாற்கடல்) 29
பரியாசவார்த்தை 51
பலபட்டடையார் 66
பாக்குவெத்திலே 58
பாட்டன் பாட்டி தேடும் பணம் 51
பார்பத்தியகாரன் (மணியக் காரன்) 56
பிரஞ்சுக்காரர்கள் 31
பிராக்கு 35
புலிசை (புலியூர்) 31
புலியூர் 30
புளியமலார் 60
புளியமிலாரிஞலடித்தல் 51
பெரிய பெருமாள் 31
பெரும்பற்றப்புலியூர் 30
பேட்டி காணல் 33
பொருளுக்காசைவைக் கொணுது 41
பொல்லாத வேடன் 55
போரில் நெல்லேக் கொட்டி வைத்திருக்குது 44
மங்களத்தரு 28
மணியக்காரர் 39,40,54
மணியக்காரர் நடத்தை 56
மணியம் வைத்தல் 34
மதம்பொழி களிறு (யானே முகக் கடவுள்) 27
மம்முதுகான் 30
மமுதலிகான் சாயபு 32,33 45
மம்முதலிகான் சாயபுபத்தாயிரம் பொன் வரிபோட நிஜேத்தல் 33
மலாலுகான் 30
மழு 28
மறியல் 60,63
மறியலிருந்த குடிகள் 39
மன்ஞர்சீமை 30
மன்ஞர்சீமை நாட்டார் 34,35 36,38
மன்ஞர் சீமையார்கள் 38
மான் 28
மிளகுகாய் புகைத்தல் 60
முத்திரைச் சீட்டு 49
முனிவர் மூவாயிரவர் 30
மூதாமியா சாயபு 31
மூவர் - தேவாரம்பாடிய மூவர் 33
மெய்க்காவலான் 66
ராசிசெய்தம் 31
மேல்வாரப்படிநெல் 30
வசனம் 39,40 - 45, 47,48,50,52-56, 63,64,66
வண்ஞன் 66
வரிப்பணம் 28
வல்லவாட்டு 29
வலங்கன் 66
வலேசிக்கிய கலே 49
வார்காரர் 62,63,64.
வார்காரர் செய்த வருத் தங்கள் 59
வார்ச்சிப் பாய்கள் 47,53
வார்ச்சிப்பாய்மாரின் அதட்டல் 50
வாரக்காரர் (சேவுகர்) 31,35

வாரம் (மேல்வாரம்) 33
வாராவில் வைத்தல் (காவலில் வைத்தல்) 44
வியாக்கிரபாதர் 29
விராட்புருடன் 39
விருத்தம் 28,29,36,29,38,39, 42-45,47-49,52-56,61,63, 64, 67
வெங்கிடாசலய்யன் (சிங்கம நாட்டுத்தாளுபதி) 36,38 39
வெங்கிடாசலய்யன் கையெழுத்திடுதல் 39
வெண்குட்டம் 29
வெள்ளைக்கொடிபோடல் 31
வெஷ்க்கம்(வெட்கம், நாணம்) 41

# விருத்த அகராதி

[எண்: பக்க எண்]


அக்கணக்கை வாங்கிய பின் 35
அப்மொழியைக் கனகசபை 34
அரைவாசி வெந்தகரிக் 57
அல்லாவின் பாத மறவாக் 34
இங்கிருந்து கணக்கெழுதல் 35
இத்தனை யோசனைகள் பண்ணி 36
இந்த மொழி கேட்டளவில் 43
இப்படியாய்ச் சீமை திட்டப் 34
இந்தவகையாய் மறியல் 53
ஊர் மணியக்கார ரெல்லாஞ் 56
எங்களிடம் பணமே 55
எந்தவிதங் குடிகள் சொல்லித் 39
எம் சபை வாணர்வளர் 62
எமகிங்கிலியர் தம்மைப் 64
என்று ரகசியமாகச் 57
என்று வார்க்காரர் சொல்ல 48
ஏதுக்கு நாயக்கரே நீர் 53
ஏனழைக்குறீர் சுபையதாரும் 34
ஒருகுடிமேற் பத்துப்பொன் 55
ஒத்தை ஓரணையே ருள்ளோர் 49
ஒரு துணிவாய்ப் பிடிவாதம் 38
ஓடியே கிராமந் தோறும் 39
கண்டு முதலானபடி
கொடுத்தோ 52
கணக்கது கொண்டு வந்தோம்54
கரங்களிலே கிட்டிகட்டி 57
கிரிதனில் வைத்திருந்த 36
குடிகளுக்கும் வருந்தம் 33
குடித்தனஞ் செய்வோர்
தம்மை 50
கெடுமதி கண்தோணுமல் 50
சிதம்பரஞ்சீமை 27
சிவனேயென்றூர்க் குடிகள் 65
சிறைதனில் வைத்திருந்தது
போல் 63
சீட்டது கொண்டு வந்த 48
செப்படி வித்தைக்காரச் 49
தங்கிய மன்னூர் சீமை 38
தண்டற சேவுகனிறங்கி 57
தன்னைப் போல் மனதினில் 34
திருவளர் வாவி 27
தோரணம் வைத்திடுபல் 33
நல்லதய்யா வென்றுசலாம் 35
நல்லது சுபையதாரே 47
நல்லது நாமிவனியத்துக் 45
நஷ்டி லட்சத் தெண்பதுக்கு 36
பக்கலில் லாருந் தோட்டிப் 53
பட்டடை தன்னைச்சோதிப்பார் 44
பாட்டாசையால்மூவர்க் 33
புத்தி சொல்லித் துக்கக்காரர் 42
பெருமைபெறு மம்முதலி83
மதியணி சபை நடேசர் 29
மறையவன் கையெழுத்தனை 39
வந்தார்கள் குடிகளெல்லா 35
வரி கொடுப்பதல்லாமல் 63
வரியென்று தந்த சீட்டை 49
வாச்சு தென்பார் அவமதி
நமக் 91
வார்க்காரரடித்தபொழு 56
வாருங்கோள் கணக்கரே 54


96599

68/62

SA
7-55

● சர்வோதய
இலக்கியப் பண்ணை

● பேராசிரியர் தெ. பொ. மீ.
நூல்கள் வரிசை — தொகுதி 12

● மதுரை உலகத் தமிழ் மாநாட்டுச்
சிறப்பு வெளியீடு எண் 2

---

தில்லைவிடங்கன் **மாரிமுத்தாப் பிள்ளை** இயற்றிய

## அண்ணீத நாடகம்

பதினெட்டாம் நூற்றாண்டு
தமிழக வரலாற்றுக்கு
ஒரு புதிய ஒளி ...

கான்சாகிபின் காலச்
சமுதாய வரலாற்றுக்கு
ஒரு தெளிவு ...

வரிக்கொடுமையைப்
பாடும் வீரப்பாடல் ...

பேராசிரியர் தெ. பொ. மீ.
அவர்களின் அரிய பதிப்பு

**( அறிஞர் மு. சண்முகம் பிள்ளையின்
ஆராய்ச்சி முன்னுரையுடன் )**

விலை ரூ **5 - 00**

---

சர்வோதய இலக்கியப் பண்ணை
32/1 மேல வெளி வீதி, மதுரை 625 001

---

அட்டை : வைகை அச்சகம் மதுரை